கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

26-5-1974

40 காசு





எனக்கு இன்னுமொரு பாரி மிட்டாய் தா!

Parry's

குழந்தைகள் எப்போதும் விரும்புவது பாரி மிட்டாய்கள். அவர்கள் இழக்கும் சக்தியை திரும்பவும் உடனுக்குடனே வழங்குபவை பாரி மிட்டாய்கள். அவை புத்தம் புதியவை. சத்துள்ளவை. ருசிமிக்கவை.

PRS-6396

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை-1





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 4

மே 26, 1974

ஆனந்த, வைகாசி 12

□

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம் ரூ. 10-00
ஆறு மாதம் ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00


மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டைப்பட யானை:
"கோடை ரொம்பக்
கொளுத்துது
ஓடை குளிர்ந்து
அழைக்குது!"

வண்ணப்படம்:
எஸ். அஸத்

பரசுராமருக்கு அருள் புரிந்தது



கார்த்தவீரியன் அரசு புரியும் போது மக்கள் வளமையுடன் வாழ்ந்தார்கள். அவனுடைய ஆட்சியைக் கண்டு தேவர்கோமானும் நாணினான்.

சையமலைச் சாரலில் ஜமதக்கினி முனிவர் பொறி, புலன்களை அடக்கி அருந்தவம் புரிந்து கொண்டிருந்தார். அவருடைய மனைவி ரேணுகா தேவி கற்பில் சிறந்தவள். ஜமதக்னி முனிவருக்கு ஐந்தாவது மகனாகத் திருமால் பிறந்தார். இவருக்கு இராமன் என்று பெயர் சூட்டினார். இவர் சிவமூர்த்தியை வேண்டித் தவம் செய்து பரசு என்ற ஆயுதம் பெற்றதனால் பரசுராமர் எனப் பேர் பெற்றார். இவர் ஒரு சமயம் நைமிசவனம் போய் அங்குள்ள முனிவர்களுடன் சில காலம் தங்கினார்.

கார்த்தவீரியன் ஒரு நாள் வேட்டையாடிவிட்டுச் சுற்றத்தாருடன் திரும்பி வரும்போது ஜமதக்னி முனிவருடைய ஆசிரமத்தைக் கண்டான்.

கார்த்தவீரியன் ஜமதக்கினி முனிவரைக் கண்டு மிகுந்த அன்பும் அடக்கமும் கொண்டு அவரை அஷ்டாங்கமாக வணங்கினான். ''சுவாமி! அடியேன் தரணிதரத்தை ஆளும் கார்த்தவீரியன். வேட்டையாடித் திரும்பும்போது தேவரீரைக் காணும் புண்ணியம் பெற்றேன்'' என்றான்.

ஜமதக்கினி முனிவர், ''அன்பனே! உன் புகழைக் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். இப்போது நண்பகல். எல்லோரும் இங்கேயே உணவருந்திச் செல்லலாம்'' என்றார்.

கார்த்தவீரியன், ''அண்ணலே! நாங்கள் எண்ணற்ற பேர்கள். இதுவோ தவக்குடில். இங்கு தாங்கள் இத்தனை பேருக்கும் உணவளிப்பது சிரமம். என்னுடைய நகரம் அண்மையில்தான் இருக்கின்றது. தங்கள் அன்பு ஒன்றே போதும்'' என்றான். ஜமதக்கினி, ''வேந்தே! அதுபற்றி நீ சிறிதும் வருந்தாதே... நமக்கு ஒரு சிரமமும் கிடையாது. இத்தனை பேருக்கும் உணவு தருவோம். நீ அருகில் உள்ள நதியில் கைகால்கள் அலம்பிவிட்டு வருக'' என்றார்.

கார்த்தவீரியன் தன் பரிசனங்களுடன் நதிக்குச் சென்றான்.

ஜமதக்கினி ரேணுகாவைப் பார்த்து ''அரசனுக்கு விருந்து வைப்பாயாக'' என்று பணித்தார். ரேணுகா தேவி காமதேனுவை நினைத்தாள். காமதேனு வந்து காட்சியளித்தது. ''அம்மா! காமதேனுவே! இங்கு வந்துள்ளவர்களுக்கு அமுது படைப்பாயாக!'' என்றாள்.

காமதேனு உணவருந்தும் பெரிய கூடத்தையும் உணவுப் பொருள்களையும், அதைப் படைக்கும் ஏவலாளர்களையும் ஒரு கணத்தில் உண்டாக்கியது. கார்த்தவீரியனும் அவனுடைய பரிசனங்களும் அமுது போன்ற உணவை உண்டு உவந்தார்கள். எல்லாம் தங்கப் பாத்திரத்தில் படைக்கப்பட்ட அதிசயத்தைக் கண்டு ஒன்றும் தோன்றாது திகைத்தார்கள். ''இது என்ன இந்திர ஜாலமா? மகேந்திர ஜாலமா? மாயமா? மந்திரமா?'' என்று ஐயுற்றான் மன்னன்.

ஜமதக்கினி, ''அரசனே! நமது தவ சக்தியால் இங்கு வந்த காமதேனுவின் கருணைத் திறம் இது. இதுபற்றி ஐயுறாதே'' என்றார்.


கார்த்தவீரியனுக்கு ஆசை பிறந்தது. காமதேனுவைக் கைப்பற்றக் கருதினான். முனிவரைப் பார்த்து, ''அடிகாள்! நீர் காட்டில் காய் கனி உண்டு கடுந்தவம் செய்பவர். உமக்கு இந்த உயர்ந்த காமதேனு தேவையில்லாதது. பேரரசனாகிய எனக்கே இது மிகுந்த பயனுடையதாகும். ஆதலால் காமதேனுவை எனக்குத் தந்து உதவ வேண்டுகிறேன்'' என்றான்.

ஜமதக்கினி, ''மன்னவனே! உன் புத்தி ஏன் அற வழியில் செல்லவில்லை? காமதேனு என்னைப் போன்ற முனிவர்களுடைய சிவபூஜைக்குப் பால் தந்து உதவுவது. இது அமுதத்துடன் பிறந்தது. இந்திரனுக்கே உரியது. அவ்வப்போது எங்களைப் போன்ற முனிவர்களுக்கு வந்து உதவி செய்யும். உன்ட வீட்டுக்கு இரண்டகம் எண்ணுவதா? வேண்டாம். நீ அற நெறியைத் தாண்டாதே. நீ சுகமே நகரம் போய் வா'' என்றார்.

கார்த்தவீரியன் சீற்றம் அடைந்தான். ''உயர்ந்த பொருள்கள் யாவும் அரசனுக்கே உரியவை'' என்று கூறிப் பலாத்காரமாகக் காமதேனுவைப் பற்றிக்கொள்ளுமாறு தமது படையாட்களிடம் சொன்னான். காமதேனு சினத்துடன் ஒரு பெருமூச்சு விட்டது. அதனால் அரசனுடைய ஏவலர்கள் பஞ்சு போல் சுருண்டு வீழ்ந்து மாண்டார்கள்.

நால்வகைப் படைகளையும் காமதேனு மீது ஏவினான். காமதேனு தன் ரோமங்களிலிருந்து பல படை வீரர்களை உண்டாக்கியது. கடும் போர் நடந்தது. கார்த்த வீரியன் தோல்வியுற்றுத் தன் நகரம் போனான்.

முனிவர் வழக்கம் போல் தவம் செய்து கொண்டிருந்தார். சில தினங்கள் சென்றன. கார்த்தவீரியன் கடுஞ் சினத்துடன் வந்து தவம் செய்யும் ஜமதக்கினி முனிவரைத் தன் வாளால் வீசிக் கொன்று விட்டான்.



ரேணுகாதேவி இந்த அநியாயத்தைக் கண்டு ஓவென்று கதறி அழுதாள். ''பாதகனே! உன்னைப்போல் நன்றி கொன்றவன் உண்டா? உணவு தந்தவரைக் கொன்றனையே! இல்லை. உன் குலத்தையே இதனால் அழித்துக்கொண்டாய்.'' என்று கூறி அழுதாள். கார்த்தவீரியன் அவள் மீது இருபத்தொரு பாணங்களை விட்டான். அவள் உயிர் துடித்துக் கீழே விழ்ந்தாள். தற்செயலாகப் பரசுராமர் அப்போது அங்கே வந்தார். தந்தை மாண்டு கிடப்பதையும் தாய் உயிர் துடிக்கப் புரள்வதையும் கண்டார். திடுக்கிட்டார். ரேணுகாதேவி நிகழ்ந்ததை மகனிடம் கூறி மாண்டாள்.

பரசுராமர் தாய் தந்தையருக்கு இறுதிக் கடன்களைச் செய்தார். ரேணுகாதேவி உலகம் போற்றும் தெய்வத் தன்மையை அடைந்தாள்.

பரசுராமர் கார்த்தவீரியனைக் குலத்தோடு தொலைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். திருக்கைலாய மலை சென்று சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றி விநாயகரை வழிபடுமாறு பணித்தருளினார். பரசுராமர் மாயூரேசம் என்ற தலம் சென்று விநாயகரை வேண்டினார். விநாயகர் அவர் முன் காட்சியளித்தார். பரசுராமர் அவரைப் பலமுறை பணிந்தார். ''தந்தி முகத்து எந்தையே! கார்த்தவீரியனுடைய குலத்தையும் அன்றி அரச குலம் முழுவதையும் அழிக்கும் வரத்தைத் தந்தருளும்'' என்றார்.

விநாயகர் தமது மழுவாயுதத்தை வழங்கியருளினார். பரசுராமர் கார்த்தவீரியன் முதலிய அரசர்களைக் குலத்தோடு அழித்து, அந்த நகரங்களை அந்தணர்கட்கு வழங்கினார். ஐந்து உதிர மடுக்களை உண்டாக்கி முன்னோர்க்குத் தர்ப்பணம் செய்தார். அதுதான் சமந்த பஞ்சகம் என்று வழங்குகிறது.



உண்ணாவிரதம்

காட்டில் வாழ்க்கை மிகமிக மோசமாகி விட்டது. குரங்குகளின் முக்கிய உணவான பழங்களுக்கு ஏகத் தட்டுப்பாடாகி விட்டது. ஆகவே நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவதற்காக குரங்கு ஒன்று உண்ணாவிரதம் இருக்க நினைத்தது. உண்ணா விரதத்தை முடித்ததும் சாப்பிடுவதற்காக தயாராகக் கையில் ஒரு வாழைப் பழம் இருப்பது நல்லது என்று தீர்மானித்தது. ஆகவே ரொம்பச் சிரமப்பட்டு ஒரு

இங்க் பாட்டில்

பொன்மலை பரிமணம்

காலை மணி எட்டு. ஒன்பதாம் வகுப்பு படிக்கும் கோபு ஆசிரியர் கொடுத்த வீட்டுக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தான். எழுதிக் கொண்டே வந்தவன் பேனா எழுதாததால் பேனாவை உதறினான். அப்படியும் எழுத முடியவில்லை. பேனாவின் கழுத்தைக் கழற்றிப் பார்த்தான். பேனாவில் 'மசி' இல்லை. பேனாவுக்கு இங்க் போடலாம் என்று இங்க் பாட்டிலை எடுத்தான். இங்க் பாட்டிலிலும் இங்க் இல்லை. அவனுக்குக் கோபம் வந்தது. வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கடைக்குப் போய் இங்க் வாங்கிக் கொண்டு வர, கையில் இங்க் பாட்டிலுடனும் காசுடனும் வேகமாக ஓடினான். அப்போது எதிரே சைக்கிளில் வந்த ஒருவன், கோபு மீது மோதக் கையிலிருந்த இங்க் பாட்டில் கீழே விழுந்து உடைந்து சிதறியது. நல்ல வேளை! கோபுவுக்கு அடி ஏதும் படவில்லை. பாட்டில் உடைந்த கவலையில் உடைந்த இங்க் பாட்டிலின் 'கண்ணாடித் துண்டுகளை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்ற நினைவின்றி வீட்டுக்குத் திரும்பினான் கோபு. அவனுக்கு இங்க் பாட்டில் உடைந்துவிட்டதே என்ற ஆத்திரம் ஒரு பக்கம். அரைகுறையாகப் போட்ட கணக்கை ஒன்பது மணிக்குள் போட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குச் செல்லலாம் என்று நினைத்தது கெட்டு விட்டதே என்ற வருத்தம் வேறு.

வீட்டுக்கு வந்த கோபு, பள்ளிக்கூடத்துக்குச் சென்று கணக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று பள்ளிக்கூடம் செல்லத் தயாரானான். வழக்கம்போல் ஒன்பது மணிக்கெல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

மாலை நான்கு மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வந்த கோபு தன் அன்னையின் காலில் கட்டுப் போடப் பட்டிருப்பதைக் கண்டதும், ''அம்மா, என்னம்மா காலிலே கட்டு?'' என்று பரிவுடன் விசாரித்தான்.

''காய்கறி வாங்கக் கடைத் தெருவுக்குப் போனேண்டா கோபு. கடைக்குப் போகிற அவசரத்திலே செருப்பு போட்டுக்கல்லே. வீதியிலே கிடந்த கண்ணாடித் துண்டு ஒன்று காலிலே குத்திடுத்து'' என்றாள்.

''கண்ணாடித் துண்டா?''

''ஆமாண்டா கோபு. யாரோ பள்ளிக்கூடத்துப் பையன் இங்க் பாட்டிலை நடு ரோட்டிலே போட்டு உடைச்சிருக்கான். பாட்டிலை உடைச்சவன் அந்தத் துண்டுகளைப் பொறுக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டிருந்தால் தொந்தரவு வந்திருக்காது'' என்றாள் கோபுவின் அன்னை. தாயார் இப்படிக் கூறியதும், 'காலையில் தான் உடைத்த இங்க் பாட்டிலா இருக்குமோ?' என்று அவன் மனம் சஞ்சலமடைந்தது.

மாலை ஐந்தரை மணிக்குக் கோபுவின் தந்தை மெதுவாக நடந்து வீட்டுக்கு வந்தார். காலையில் ஆபீசுக்குச் சைக்கிளில் சென்றவர் நடந்து வருகிறாரே, சைக்கிள் என்ன ஆச்சு?

வாழைப்பழத்தை அலைந்து திரிந்து சம்பாதித்து பக்கத்தில் வைத்துக் கொண்டது.

உண்ணா விரதமிருந்த குரங்குக்கு அருகில் இருக்கும் பழத்தைக் கண்டதும் நாக்கில் ஜலம் கொட்டியது. எனவே பக்கத்தில் இருக்கிற பழம் கையில் இருந்தால் என்ன என்று ஒரு யோசனை தோன்றியது. அவ்வளவுதான்; பழத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டது.

சிறிது நேரம் சென்றதும் குரங்குக்கு இன்னொரு அபூர்வ யோசனை தோன்றியது. 'கையில் இருக்கிற பழத்தை உரித்து வைத்துக் கொண்டால் என்ன?' என்பதே அந்த யோசனை. அப்படியே செய்தது. அப்புறம் உரித்து வைத்துக் கொண்டிருக்கும் பழத்தை வாயில் போட்டு அடக்கி வைத்துக் கொண்டால் என்ன என்று அதை வாயிலும் போட்டுக் கொண்டது. அவ்வளவுதான்! உண்ணா விரதம் முடிந்தது. பழமும் சாப்பிட்டு முடிந்தது. அதிலிருந்துதான் குரங்குகள் எல்லாம் எந்தப் பண்டத்தைத் தின்றாலும் வாயில் அடக்கி வைக்க ஆரம்பித்தன போலும்!

- என். இளங்கோவன்

''அப்பா, உங்க சைக்கிள் எங்கே அப்பா?'' என்றான் கோபு.

''சைக்கிளா? ஆபீஸிலிருந்து நல்லாத்தான் சைக்கிளிலே வந்துக்கிட்டிருந்தேன். வர்ற வழியிலே ஒரு கண்ணாடித் துண்டு சைக்கிள் டயர்லே குத்தி டியூப் வெடிச்சுடுத்து'' என்றார்.


''கண்ணாடித் துண்டு குத்திச் சைக்கிள் டயர் பர்ஸ்ட் ஆயிடுத்தா?''

''ஆமா. யாரோ பள்ளிக்கூடத்துப் பையன் இங்க் பாட்டிலை நடு ரோட்டிலே போட்டு உடைச்சுட்டான்போல இருக்கு. உடைஞ்ச கண்ணாடித் துண்டுகளை உடனே பொறுக்கிக் குப்பைத் தொட்டியிலே போட்டிருந்தால் நல்லா இருந்திருக்கும். வீதியிலே கிடக்கிற கண்ணாடித் துண்டுகள், வாழைப்பழத் தோல், ஆணி முதலியவைகளை எடுத்துப் பக்கத்திலிருக்கும் குப்பைத் தொட்டியில் போடணும்னு ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை இந்தக் காலத்தில் யார் கடைப்பிடிக்கிறாங்க? வாத்தியார் சொல்றபடி இந்தக் காலத்திலே எந்தப் பையன் நடக்கிறான்?'' என்று அலுத்துக் கொண்டார் அப்பா.

அவன் தந்தை இப்படிக் கூறியதும் கோபுவின் தலை தானாகக் குனிந்தது. அப்பொழுது அவன் மனம் சொன்னது: 'கோபு, நீ நடு ரோட்டில் கைதவறி உடைத்த இங்க் பாட்டிலின் கண்ணாடித் துண்டு காலையில் உன் அன்னையின் காலில் குத்தியது; மாலையிலோ உன் தந்தையின் சைக்கிளைப் பழுது செய்து விட்டது. இன்னும் எத்தனை பேர்களுக்கு உன்னுடைய 'இங்க்' பாட்டிலின் கண்ணாடித் துண்டுகள் துன்பம் கொடுத்ததோ?''

'ஆமாம். நான் செய்தது முட்டாள் தனம்தான். அவைகளை உடனே பொறுக்கி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டிருக்க வேண்டும்' என்று கூறிக்கொண்டே வீட்டை விட்டு வேகமாக ஓடினான் கோபு.

அந்தக் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கிக் குப்பைத் தொட்டியில் போடத்தான் அவன் அப்படி வேகமாக ஓடுகிறான் என்று உங்களுக்குச் சொல்ல வேண்டுமா என்ன?



தெருவில் ஒரே கூச்சல். பிள்ளைகள் எல்லோரும் விளையாட்டுக்காகத் தெருவில் கூடி இருந்தார்கள். ராமு, கோபு, சிங்காரம் மூவரின் கைகளிலும் பூணிட்ட புதிய பம்பரங்கள் — சாட்டைகளோடு இருந்தன.

சிங்காரம் மற்ற இருவர்களுடைய பம்பரங்களைப் பார்த்தான். அவனுடைய பம்பரம் புதிதாகப் பளபளப்பாக இருந்ததோடு பெரியதாகவும் இருந்தது. ராமுவினுடையதோ சிறியதாக — ஒப்புக்குப் பம்பரமாக இருந்தது. ராமு ஏழை. அவனால் அந்தப் பம்பரத்தை வாங்க முடிந்ததே பெரிய சாதனை. ஆனால் கோபுவினுடையது? சிங்காரத்துக்கு முகம் களித்துக் கொண்டது. கோபு ஒரு ஜவுளிக் கடை குமாஸ்தாவின் மகன்தானே? தன்னைப் போல் ஆபீஸில் வேலை செய்கிறவரின் பிள்ளையா? அவனுமா அவ்வளவு பெரிய பம்பரத்தை வைத்திருப்பது?

''என்ன ஆட்டம் ஆடலாம்?'' என்று கேட்டான் சிங்காரம்.

''எது வேண்டுமானாலும் சரி'' என்றான் கோபு. ஆனால் ராமு, ''தனக்குக் கைவந்த ஒரு ஆட்டத்தின் பெயரைக் கூறி அந்த ஆட்டத்தை ஆடலாமா? என்று கேட்டான். ஏனென்றால் அவன் பம்பரம் சிறியது. வேறு ஆட்டம் என்றால், அதில் அவன் பம்பரம் தேறுமா என்ற சந்தேகம். அதனால்தான் அவன் ஒரு சாதாரண ஆட்டத்தைக் குறிப்பிட்டான்.

''தலைறி ஆடலாமே!'' என்றான் சிங்காரம். அவனுக்குத் துடிப்பு. தன்னுடைய பெரிய பம்பரத்தால் மற்றவர்களுடைய பம்பரங்களைக் குத்திப் பிளந்துவிட வேண்டும் என்று. அப்படிப் பிளக்க முடியாவிட்டாலும் தன்னுடன் ஆடியதற்கு அடையாளமாகவாவது அவர்கள் பம்பரத்தைச் சிறிது கொத்திக் குழியாக்கிவிட வேண்டும். ராமுவினுடையதை இல்லாவிட்டாலும் கோபுவின் பம்பரத்தைக் கட்டாயம்.....

ஆனால் கோபு ஒத்துக் கொள்ளவில்லை.


''இருக்கிறது மூணு பேர். இதிலே எப்படிடா தலைந் ஆடறது? இன்னும் பசங்க வரட்டும். அது வரைக்கும் ராமு சொன்னபடி அந்த ஆட்டத்தையே ஆடலாம்'' என்றதோடு, நட்டநடு ரோட்டில் ஒரு பெரிய — ஏறக் குறைய ஒரு மீட்டர் குறுக்களவுள்ளதான — வட்டத்தைத் தன் பம்பரத்தின் ஊக்கினாலே கிழித்தான். அதன் நடுவே பம்பரத்துக்குப் பூண் இருப்பதுபோல் சிறு வட்டம் — மிகச் சிறியது ஒன்று கிழித்தான். அதில் ஒரு சிறிய கோலி அளவுள்ள செங்கல் துண்டை வைத்தான்.

''ஜூட்டா?'' செங்கல்லை வைத்து நிமிர்ந்த கோபு கேட்டான்.

''ஜூட்..... !''

அது வரையில் தன் பம்பரத்தில் சாட்டைக் கயிற்றைச் சுற்றிக் கொண்டிருந்த சிங்காரம் ஓங்கிச் சொடுக்கிக் குத்தினான்.

முதல் குத்திலேயே செங்கல் துண்டு துகளாகிப் பறந்தது. உடனே மூவரும் பரபரப்போடு ''அபீட்'' எடுக்க ஆரம்பித்தனர். ராமு முதலில் படபடப்புக்கு ஆளானாலும் மறு விநாடியே தன்னைச் சுதாரித்துக் கொண்டு நிதானத்தோடு 'அபீட்' எடுத்து முடித்தான். கோபுவும் தொடர்ந்து 'அபீட்' என்று இரைந்தவாறே பம்



பரத்தைத் தூக்கிப் பிடித்தான். கோபு 'அபீட்' என்று கத்திய வேகத்தில் துணுக்குற்றுப் போனதாலோ என்னவோ சிங்காரம் அப்பொழுதுதான் சாட்டையில் சுண்டி மேலே தூக்கிய பம்பரத்தைக் கை தவற விட்டு விட்டான்.

''வை....வை'' என்று படபடத்தான் கோபு. கடைசியாக எவன் 'அபீட்' எடுக்கத் தவறிவிடுகிறானோ அவன்தானே பம்பரத்தைப் பலி வைக்க வேண்டும். அதன் படி சிங்காரம் தன் பம்பரத்தைக் கல் இருந்த இடத்தில் வைத்தான். அவனுக்கு உள்ளம் முறுமுறுத்தது. 'பின் என்ன? ஒரே குத்தில் கல்லைச் சுக்குநூறாக ஓடச் செய்துவிட்டுக் கடைசியில் தானேயா பம்பரத்தை வைக்க வேண்டும்? இந்தக் கோபுவுக்குத்தான் எவ்வளவு அவசரம்? வை...வை... என்று குதிக்கிறானே..... இவனும் ஒரு சமயம் மாட்டிக்காமலா போகப் போகிறான்? அப்போது பார்த்துக் கொள்ளலாம்.'

வட்டத்தின் நடுவே வைக்கப்பட்ட சிங்காரத்தின் பம்பரத்தை ராமுவும் கோபுவும் மாறி மாறிச் சொடுக்கிக் குத்தினார்கள். கோபுவுக்கு அவ்வளவு குறி போதாது. ஆனால் ராமுவுக்குச் சரியாகப் படும் என்றாலும் சுரைக்காய் போன்றுள்ள அதை, வட்டத்தைவிட்டு வெளியேற்ற அவனது முந்திரிப் பழம் போன்றுள்ள பம்பரத்தால் முடியவில்லை.

''ஏய்.... கோபு! குத்தேன்டா, பார்த்து. இவ்வளவு பெரிசா வைச்சிருக்கியே!''—சிங்காரம் கேலி தொனிக்கச் சிறினான்.

''என்னடா செய்யறது? படமாட்டேங்குதே..... ஜூட்....!''

கோபுவின் பம்பரம் ரோஷம் பிறந்தது போல் வட்டத்துக்கு உள்ளிருந்த சிங்காரத்தின் பம்பரத்தைக் குத்தித் தூரத்தியது.

உடனே சிங்காரம் ஓடிப் போய்த் தன் பம்பரத்தை எடுத்தான். அதில் கோபு பம்பரத்தின் ஊக்குப் பதிந்த சிறு 'உணி' அடையாளம் அவனை ஆத்திரம் அடையச் செய்தது.

''என் பம்பரத்தை இப்படித்தானே உணி ஏத்தினே....? இரு... இரு... உன்னை. நீ மாட்டிக்க மாட்டே...? அப்போ பார்த்துக்கறேன்....!'' என்று அபீட் எடுக்க வேண்டிய நிலையையும் மறந்து கறுவினான் சிங்காரம்.

''நல்ல உணி ஏறிச்சில்லே!'' என்று கபடமற்றுச் சிரித்த கோபு, ''நாங்க ரெண்டு பேரும் அபீட் எடுத்தாச்சு, நீதான் மறுபடியும் வைக்கணும். வை..'' என்றான்.

சிங்காரத்துக்குக் கண்கள் சிவக்க ஆரம்பித்துவிட்டன. நல்ல காலம்! அதற்குள் இரண்டு மூன்று பேர் பம்பரத்துடன் வந்துவிட்டனர்.

அங்கத்தினர் அதிகமாகி விடவே, சிங்காரம், ''தலேறி ஆடலாம்!'' என்றவாறு வெகு அவசரமாகக் கிழக்கு மேற்கான அந்த வீதியின் நடுவில் சில கஜ தூரம் இடைவெளிவிட்டு — இரண்டு புறமும் கோடுகளைக் கிழித்தான். மேல் பக்கக் கோட்டின் நடுவே பூமியளவு ஒரு வட்டம் போட்டு ஒரு சிறு கல்லையும் வைத்தான்.



என்ன ஆட்டம் ஆடலாம்!

எம்.எஸ்.ரவீந்திரன்

''ஆடலாமா?'' என்ற ஒருவன், 'ஜூட்' என்று சொடுக்கிக் குத்தினன்.

ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது. கோபுவுக்குத்தான் குறி வராதே. இருந்தாலும் இந்த நாலு ஆட்டம் வரையில் கையில் ஏற்றி, வைக்கப்பட்ட பம்பரத்தில் மோத விட்டுச் சமாளித்து வந்தான். இம்முறை, பாவம் அவன் பம்பரம் சாலேயோரப் புல்லில் சிக்கிச் சுழற்சி நின்று விட்டது.

சிங்காரம் ஒரு துள்ளுத் துள்ளினன். உடனே ஓடி அந்தப் பம்பரத்தை எடுத்து வந்து, இதற்குமுன் வைக்கப் பட்டிருந்த பம்பரத்தை அதற்குரியவனிடம் கொடுத்துவிட்டு, கோபுவின் பம்பரத்தை அங்கு வைத்தான். கோபு அகப்பட்டுக் கொண்டதில் — அவன் பம்பரம் வகையாக மாட்டிக் கொண்டதில் — சிங்காரத்துக்கு ஓரே படபடப்பு! இதோ இந்த ஓரே சொடுக்கில் அந்தப் பம்பரம் கீழ்க் கோட்டைத் தாண்டும்படி செய்ய வேண்டியது தான். பிறகு சதக்...சதக்... ஐந்து முறை ! ஒரு பள்ளமே அந்தப் பம்பரத்தில்! ஆஹா !

சிங்காரம் சொடுக்கிக் குத்தினன். அவன் எண்ணம் போலவே கோபுவின் பச்சைப் பம்பரம் சில அடிகள் உருண்டு கிழக்குக் கோட்டையும் தாண்டி விட்டது.

''சாட்டைக்கு அம்பேல்.... சாட்டைக்கு அம்பேல்!''

எல்லாரும் தம் தம் சாட்டைகளைக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டனர். கோபுவின் பம்பரத்தை ஓடிச் சென்று எடுத்து வந்து அந்தக் கோட்டில் வைத்துக் குத்தப் போன சிங்காரம் ஒரு நிமிஷம் நிதானித்தான். பிறகு எழுந்து கொண்டான். ''நீங்க எல்லாருமே முதல்லே குத்துங்க. ஓரே இடத்தில் குத்துங்க.... அப்பத்தான் அடையாளம் இருக்கும்'' என்றவாறு நகர்ந்து கொண்டான்.

எல்லோரும் ஐந்து ஐந்து முறை குத்தி முடித்தனர். அது வரையில் தன் பம்பரத்தின் ஊக்கைத் தீட்டிக் கொண்டிருந்த சிங்காரம் ராஜ நடை போட்டு வந்தான். வசமாக அமர்ந்து கோபுவின் பம்பரத்தை இடது கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மற்றவர்களால் குத்தப்பட்டுக் குழிகுழியாக இருந்த இடத்தில் எச்சிலேத் துப்பினன். பிறகு தன் பம்பரத்தின் கூர் தீட்டிய ஊக்கினல் ஓங்கிச் சதக்...., சதக்.... சதக்..... சதக்...!

நான்கு முறை குத்தியாகிவிட்டது. இன்னும் ஐந்தாவதாக ஓரே ஒரு முறை.... கடைசி முறை !

அவனது இடது கை பச்சைப் பம்பரத்தை அசையாதிருக்கும்படி நன்ருகப் பிடித்துக் கொள்ள, அவனது மூக்கு 'தம்' பிடித்துப் பலம் தர, வலது கை ஓங்கி தன் பம்பரத்தின் கூர் ஆணியால் கோபுவின் பம்பரத்தை....

''சதக்....''

ஆனல்....

குத்திய மறுகணம், ''ஆ...அம்மா! ஐயோ!'' என்று அலறினன் சிங்காரம். அவனது இடது கையில் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே உள்ள ஐவ்வு சதைப் பகுதியில், அவனது வலது கையாலேயே — அவனது பம்பரத்தின் நீட்டப்பட்ட ஊக்கினலே குத்தப்பட்டுவிட்ட காயத்திலிருந்து ரத்தம் பீறிட்டது.

''ஐயோ, அம்மா !'' என்று சிங்காரம் அலறித் துடித்தவுடன் ராமு உள்பட எல்லோருமே பறந்துவிட்டனர். ஆனல் கோபு ஓடவில்லே. இதைச் சற்றும் எதிர்பார்க்காததால் அவன் துணுக்குற்றுப் போனன்.

''ரொம்ப வலிக்குதாடா ?''

''ஆமாண்டா, சனியன் பிடிச்சவனே ! உன் பம்பரத்தைக் குத்தப் போய்த்தானே நான் என் கையைக் குத்திக்கிட்டேன். இரு...இரு....உன்னே என் கை ஆறட்டும்.''

''என் பம்பரத்தை வேணுமின்னல் உடைச்சுப் போட்டுடு. அதுக்கேண்டா கையைக் குத்திக்கணும்? டாக்டர்கிட்டே போகலாம். வா.''

கோபு, சிங்காரத்தின் வலது கையைப் பற்றித் தாங்க முயன்றன்.

அந்த விநாடியில் சிங்காரத்தின் இதயத்தில் புது ரத்தம் பாய்ந்தது போலும்.

'' நீயும் ஓடறதுதானேடா! உன் பம்பரத்தை குத்தப் போய்த்தானே...''

''ஆட்டத்திலே என் பம்பரம் மாட்டிக்கிச்சி. நீ குத்தறே. உன் பம்பரமா இருந்தா ஆட்டத்திலே நானும்தான் குத்துவேன் !''

''கோபு'' என்று அவனே இறுகப் பற்றிக் கொண்டான் சிங்காரம். 'விளேயாட்டில் பகையை வளர்த்துக்கொள்ளலாமா?' அவன் செயல் அவனுக்கே வெட்கமாக இருந்தது. ஆனல் கோபு தான் எத்தனே பெருந்தன்மையுடன் பேசினன். சிங்காரத்தின் மனத்திலே பெருமிதம் பொங்கியது.

16	3	2	13
5	10	11	8
9	6	7	12
4	15	14	1

அதிசயக் கட்டங்கள்

குமாரி சௌந்தரா

இது ஒன்றும் புதுமையானதல்ல. மேலே இருக்கும் கட்டத்தைப் பாருங்கள் :

பூ! இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா ? இருக்கிறது. இதன் எண்களைக் கீழ் மேலாகவோ அல்லது இடமிருந்து வலமாகவோ எப்படிக் கூட்டிப் பார்த்தாலும் 34 தான் வரும். குறுக்காகக் கூட்டிப் பாருங்கள். 4 + 6 + 11 + 13 = 34. நடு நான்கு கட்டங்களைக் கூட்டிப் பாருங்கள். 10 + 11 + 6 + 7 = 34 எப்படி? அது மட்டுமல்ல. இந்தக் கட்டத்தை உருவாக்கிய **ஆல்பிரட் ட்யூரர்,** தாம் இதை வரைந்த வருடமாகிய '1514'யும் கீழ் வரிசையில் நுழைத்திருக்கிறார், பாருங்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கணித நிபுணர் லியனார்ட் ஆய்லர் உருவாக்கிய கட்டம் கீழே உள்ளது.

52	61	4	13	20	29	36	45
14	3	62	51	46	35	30	19
53	60	5	12	21	28	37	44
11	6	59	54	43	38	27	22
55	58	7	10	23	26	39	42
9	8	57	56	41	40	25	24
50	63	2	15	18	31	34	47
16	1	64	49	48	33	32	17

மேலிருந்து கீழ் இடமிருந்து வலம் எப்படிக் கூட்டினாலும் 260தான் வரும். நான்காவது கட்டத்துடன் நிறுத்திக் கொண்டால், அதாவது பாதியில் நிறுத்திக் கொண்டால் சரியாக 130 வரும். மேலும் செஸ் ஆட்டத்தில் வரும் குதிரை (Knight) காயை ஒன்றில் ஆரம்பித்து முறைப்படி நகர்த்தினால் 1லிருந்து 64 வரை உள்ள எண்கள் வரிசைக்கிரமமாக வரும்.

அடுத்து உள்ளது பேரறிஞர் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் உருவாக்கியது.

1	48	31	50	33	16	63	18
30	51	46	3	62	19	14	35
47	2	49	32	15	34	17	64
52	29	4	45	20	61	36	13
5	44	25	56	9	40	21	60
28	53	8	41	24	57	12	37
43	6	55	26	39	10	59	22
54	27	42	7	58	23	38	11

எப்படிக் கூட்டினாலும் (மேலிருந்து கீழ் இடமிருந்து வலம்) 260 வரும். நடுவில் 4 கட்டங்களோடு நிறுத்திக் கொண்டால் 130 வரும். கோடிட்டபடி வரும் கட்டங்களின் எண்களைக் கூட்டினால் 260 வருகிறது. சோதித்துப் பாருங்கள்.

'விசித்திர ஒன்பது'

சிவராஜ கிருஷ்ணன்

விசித்திர எண் ஒன்பது. அதன் விசித்திரங்களில் சில கொடுக்கப்பட்டுள்ளன.

$$9 \times 9 + 7 = 88$$
$$98 \times 9 + 6 = 888$$
$$987 \times 9 + 5 = 8888$$
$$9876 \times 9 + 4 = 88888$$
$$98765 \times 9 + 3 = 888888$$
$$987654 \times 9 + 2 = 8888888$$
$$9876543 \times 9 + 1 = 88888888$$
$$98765432 \times 9 + 0 = 888888888$$

$$999999 \times 2 = 1999998$$
$$999999 \times 3 = 2999997$$
$$999999 \times 4 = 3999996$$
$$999999 \times 5 = 4999995$$
$$999999 \times 6 = 5999994$$
$$999999 \times 7 = 6999993$$
$$999999 \times 8 = 7999992$$
$$999999 \times 9 = 8999991$$

எட்டைத் தவிர 1லிருந்து 9 வரை எல்லா எண்களையும் எழுதிக் கொள்ளுங்கள்: அதாவது, 1,23,45,679.

இந்த எண்ணை ஒன்பதாலும், அதன் மடங்குகளாலும் பெருக்கி விடையைச் சரி பாருங்கள்.

$$12345679 \times 9 = 111111111$$
$$12345679 \times 18 = 222222222$$
$$12345679 \times 27 = 333333333$$
$$12345679 \times 36 = 444444444$$
$$12345679 \times 45 = 555555555$$
$$12345679 \times 54 = 666666666$$
$$12345679 \times 63 = 777777777$$
$$12345679 \times 72 = 888888888$$
$$12345679 \times 81 = 999999999$$



ஜூபிடர் கிரகம்

(குரு - வியாழன்)

— கிருஷ்ணவேணி —

சூரியப் பாதையில் ஐந்தாவது கிரகமாகவும், கிரகங்களிலேயே மிகப் பெரிய கிரகமாகவும் விளங்குவது ஜூபிடர். புராதன ரோமானியர்களின் புராணத்தின்படி கடவுளர்களின் தலைவராக விளங்குபவர் ஜூபிடர். நாம் இந்தக் கிரகத்தைக் குரு என்கிறோம். வியாழ பகவானுக்குத்தான் குரு என்று பெயர். ஜூபிடர் எப்படிப்பட்டது? பூமியைப் போல் 1300 பூமிகளைத் தன்னகத்தே அடக்கிக் கொள்ளக்கூடிய அத்தனை பெரிய கிரகம் அது. சூரியனிடமிருந்து 484 மிலியன் மைல்களுக்கப்பால் உள்ளது. ஜூபிடரின் குறுக்களவு 87000 மைல்கள். தன்னுடைய இருசில் இது வெகு வேகமாகச் சுழல்கிறது. தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள ஒன்பது மணியும் ஐம்பது நிமிஷங்களும் ஆகின்றன. அதாவது கிட்டத்தட்ட ஜூபிடரில் ஒரு நாள் என்பது பத்து மணி நேரம்தான். ஜூபிடர் சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு எத்தனை காலமாகிறது தெரியுமா? பன்னிரண்டு ஆண்டுகள். பூமிக்கு ஒரே ஒரு சந்திரன். செவ்வாய்க்கு இரண்டு. ஜூபிடருக்கோ பன்னிரண்டு சந்திரன்கள்.

ஜூபிடர் கிரகம் மற்றக் கிரகங்களை விட மிக மிக வேகமாகத் தன் இருசில் சுழல்வதினால் அதன் மத்தியப் பகுதி புடைத்துக்கொண்டு நீளுவதையும் உச்சியும் அடிப் பாகமும் தட்டையாவதையும் வான சாஸ்திரிகள் காணுகிறார்கள்.

வியாழன் கிரகமான ஜூபிடரின் சீதோஷ்ண நிலை எப்படி? சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால் இங்கு எப்போதுமே கடுங் குளிர்தான். சராசரி உஷ்ண நிலை மைனஸ் 200 டிகிரி ஃபாரன்ஹீட் என்றால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்களேன்.


இங்கு தண்ணீர் உண்டா? எப்படி இருக்க முடியும்? அப்படி ஏதாவது இருக்குமானால் அது பனிக் கட்டியாகத்தான் இருக்கும்.

மேல் பரப்பு எப்படி? இன்னமும் விடுவிக்கப்படாத புதிராகத்தான் இருக்கிறது. அழுத்தமான வாயுக்களால் ஆன மேல் பரப்பு. முக்கியமாக ஜல வாயு, மார்ஷ் வாயு, அம்மோனியா, மெதேன் ஆகிய வாயுக்களின் கலவை. இந்த வாயுக்கள் அத்தனையும் விஷத் தன்மையுடையவை. நம்மை மூச்சுத் திணற வைக்கக் கூடியவை.

தாவரங்கள் உண்டா? இல்லை. இருப்பதற்கும் ஆதாரமில்லை.

சூரிய வெளிச்சம்? உண்டு. ஆனால் உஷ்ணத்தைக் கொடுக்கும் அளவுக்கு அதிகமில்லை.

1609ல் கலிலியோவின் தூரதரிசினி ஜூபிடரின் நான்கு சந்திரன்களை மிக இலகுவாகக் காட்டியது. கலிலியோ






❀ ❀ ❀


சூரியப் பாதையில் மிகப் பெரிய கிரகமான ஜூபிடரின் ஒரு கற்பனைத் தோற்றம் இது. இதன் வானத்திலே ஜூபிடரின் பன்னிரண்டு சந்திரன்களில் நான்கு பிறைகளாகத் தெரிவதைப் பாருங்கள். வானத்திலிருந்து இக்கிரகத்தை நோக்கினால் பல்லாயிரம் மைல்களுக்கு விஷ வாயுக்கள் சூழ்ந்திருப்பதைக் காணலாம். காதைச் செவிடுபட வைக்கும் பேரிரைச்சல் சதா இக்கிரகத்தில் வீசும் பெரும் புயலினால் ஏற்படுகிறது. இக் கிரகத்தில் வீசும் சிறிய புயலையே இங்கு நீங்கள் காண்கிறீர்கள். கொடிய விஷவாயுக்களினால் ஏற்படும் இந்தச் சுழலில் ஆசியா கண்டமே மூழ்கிவிடும். அத்தனை பெரியது. வாயு மண்டலத்துக்கு அடியிலே உள்ள இருண்ட பகுதியில் என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யாருக்கும் எதுவுமே தெரியாது. அங்கு நாம் போனால் ஒரு விநாடியில் நாம் சப்பட்டையாக அழுத்தப்பட்டு அப்பளம்போல் ஆகி விடுவோம்! அழுத்த சக்தி அத்தனை அதிகம் இங்கு.

❀ ❀ ❀

1. ஜுபிடர் கிரகத்தின் மேற்பரப்பில் உள்ள, அம்மோனியா, மெதேன் வாயுக்களால் சூழப்பட்டுள்ள பாகம்.
2. அம்மோனியா ஸ்படிகங்களால் நிறைந்துள்ள மேக மண்டலம்.
3. உறைபனியால் மூடப்பட்டுள்ள பகுதி. 4. பாறைப் பகுதி.



ஜுபிடர் கிரகத்தை ஆராய அனுப்பப்பட இருக்கும் விண்கலன்.



அவைகளுக்கு முறையே லோ, யூரோப்பா, கானிடி, காலிஸ்டோ என்று பெயரிட்டார். இதன் பிறகு 1892 லிருந்து 1951 வரை எட்டுச் சந்திரன்களைக் கண்டிருக்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் மிகச்சிறிய சந்திரன்கள். ஜூபிடர் கிரகத்தையும் அதன் முதல் நான்கு சந்திரன்களையும் வானத்திலே மிகச் சுலபமாகவே காணலாம். பைனாகுலர்களின் மூலமாகவும்கூடப் பார்க்கலாம். ஜூபிடர் கிரகத்தின் குறுக்கே கச்சை அணிந்தது போல் மஞ்சள் நிறத்திலிருந்து செம்பழுப்பு நிறத்துக்குப் பல பட்டைகள் தெரிகின்றன. இதிலே சிவப்பு நிறத்தில் மிகப் பெரியதொரு புள்ளியும் தெரிகிறது. இப்புள்ளி பூமியின் அளவுக்கு இருக்கிறது.

ஆராய்ச்சியாளர்களின் முடிவுப்படி ஜூபிடர் கிரகம் எதனால் ஆக்கப்பட்டிருக்கும்? ஒரு சிலர் இந்தக் கிரகம் முழுதுமே வாயுக்களால் நிறைந்தது என்கிறார்கள். வேறு சிலர்

இந்தக் கிரகத்தின் நடு மையத்திலே உறுதியான பாறையும், அதைச் சுற்றிக் கனமான உறைபனியின் மூடலும், இந்த உறைபனிக்கு மேலே அமோனியா வாயுவின் படிகங்களும் அதற்கு மேலே அதாவது கிரகத்தின் மேல் பக்கத்தில் அமோனியா, மெதேன் ஆகிய வாயுக்களும் சூழ்ந்திருப்பதாகக் கருதுகிறார்கள். பூமியைப் போலவே அதன் வயதேதான் ஜூபிடருக்கும் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பூமியின் நடுவிலே இன்னமும் எப்படி நெருப்பு குழம்பாக இருக்கும் என்று கருதுகிறோமோ, அப்படியே ஜூபிடரின் மையப் பகுதியிலும் தீக்குழம்பும் அதன் மேல் பகுதி கெட்டிப்பட்டுப் பாறையாகவும் இருக்கும். கெட்டிப்பட்ட மேல் பகுதிப் பாறை உள்ளிருக்கும் தீக்குழம்பின் உஷ்ணத்தைப் பாதுகாத்து வருகிறது. சூரியனிடமிருந்து இக்கிரகத்துக்கு உஷ்ணம் மிக மிகக் குறைவாகவே கிடைக்கும். ஏனென்றால், இது சூரியனிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால். தோற்றத்துக்கு மிகப் பெரிய கிரகமானாலும் இது மிகவும் இலேசான கிரகம். ஏனென்றால் இது கனமற்ற பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஓர் கணிப்பு.

மெதேன் என்பது துர்நாற்றமுடைய (மார்ஷ் காஸ்) வாயு. பூமியின் மேற்பரப்பில் இதற்கு வெடிக்கும் குணம் உண்டு. ஜூபிடரின் மேற்பரப்பில் உள்ளதாகக் கருதப்படும் மற்றொரு வாயு அம்மோனியா. இது எப்படிக் கமறலையும் மூச்சுத் திணறலையும் உண்டாக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். இவ்விரண்டு விஷ வாயுக்களுமே ஜல வாயுவின் அங்கங்கள். கனமற்றவை.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி மனிதன் ஜூபிடர் கிரகத்தில் இறங்குவது என்பது முடியாத காரியம். அதைச் சூழ்ந்துள்ள விஷ வாயுக்களும், அதன் மிகப் பெரிய பரப்பும், மிக அதிகமான அதன் ஈர்ப்புச் சக்தியும் இந்தக் கிரகத்தில் மனிதன் இறங்கினால்கூட அதிலிருந்து மறுபடியும் கிளம்பித் திரும்பி வர முடியாது என்பது தெளிவாகிறது. இந்தப் பெரிய கிரகத்தை ஆராய்வதற்குச் சாத்தியமான ஒரே வழி இதன் சந்திரன்களில் ஒன்றில் போய் இறங்கிக் கொண்டு அங்கிருந்து ஆராய்வதுதான். அதுவும் நானூறு மிலியன் மைல்கள் விண்வெளியில் பிரயாணம் செய்யக்கூடிய அளவுக்கு நம் விஞ்ஞான உலகம் வளர வேண்டும். காத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். காலத்தை வென்று வானைக் கூட ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

நல்லோரை நாடிவாழ்

'தமிழ்முடி'

சிற்பி தெய்வச் சிலைகள் பல
செய்தான் தினமும் தவறாமல்
அற்புதச் சிலைகளைக் கோயிலுக்கே
அனுப்பி வைத்தான் கழுதையின்
மேல்!

தெய்வச் சிலையை அக்கழுதை
தினமும் சுமந்து சென்றதுவே!
தெய்வம் சுமந்து வரும்பொழுது
தினமும் மக்கள் வணங்கினரே !

கடவுளை ஏற்றி வருகையிலே
கழுதையைப் போற்றித் துதித்
தார்கள்
வடையும் பழமும் கழுதைக்கு
வழங்கி மகிழ்ந்து புகழ்ந்தார்கள் !


கழுதை அதனால் வீணாக்
கர்வம் கொண்டே எண்ணியது
'விழுந்து மக்கள் வணங்குகிற
மிகுந்த பெருமை உடையவன்யான்!

அதனால் முதுகில் ஆண்டவனை
யானும் சுமத்தல் இழிவாகும் !
அதனால் இனிமேல் ஆண்டவனை
அறவே சுமக்கப் போவதில்லை !'

என்றே கருதிச் சாக்கடையில்
இறைவன் சிலையைத் தள்ளியது !
நன்றாய்ப் பிறகு பெருமையுடன்
நடந்தது மக்கள் மதிப்பரென !

தெய்வச் சிலையைத் தள்ளியதாலே
சீற்றம் கொண்டார் மக்களெல்லாம்!
நையப் புடைத்தே கழுதையை உடனே
நாட்டில் இருந்தே ஓட்டிவிட்டார் !

பெரியோரைச் சேர்ந்து வாழ்வதினாலே
பெருமை உண்டாகும் சிறியவர்க்கு!
பெரியோரைவிட்டு நீங்குவதாலே
பெருமையே போகும் சிறியவர்க்கு !



உழைப்பின் உயர்வு

வெகு காலத்துக்கு முன்னால் கந்தன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவனுக்குச் சங்கன், ரங்கன் என்ற இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் சின்ன வயது முதல் முழுச் சோம்பேறிகளாகவே விளங்கினார்கள். நாளெல்லாம் கந்தன் உழைத்துப் போட, சங்கனும் ரங்கனும் நன்றாகச் சாப்பிட்டு விட்டு ஒரு வேலையும் செய்யாமல் உடலை வளர்த்து வந்தனர். கந்தன் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் திருந்தவே இல்லை.

திடீரென்று ஒருநாள் கந்தன் இறந்து போனான். அவனுடைய புதல்வர்களான சங்கனும் ரங்கனும் எவ்விதக் கவலையும் அடையவில்லை. தகப்பன் தேடி வைத்துள்ள பணத்தையும், பொருள்களையும் தாராளமாகச் செலவு செய்து சுகமாகக் காலம் கழித்தனர்.

சில ஆண்டுகள் சென்றதும் தகப்பன் தேடி வைத்து விட்டுப் போன பணம், நிலம், வீடு எல்லாவற்றையும் இழந்து ஒட்டாண்டிகளானார்கள். அப்புறம் அவர்களுக்குச் சாப்பாட்டுக்கே வழி இல்லை. அந்த முழுச் சோம்பேறிகளால் வேலை செய்து பிழைக்கவும் முடியவில்லை. வேறு வழியின்றி இருவரும் ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுத்து வயிறு வளர்க்கலானார்கள்.

ஒரு நாள் இரவு சங்கனும் ரங்கனும் ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அன்று ஏனோ அவர்களுக்குப் பிச்சை கிடைக்கவேயில்லை. பட்டினி கிடந்தார்கள்.

தம்பி ரங்கன் சொன்னான்: ''அண்ணா! இப்படி ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது ஊரில் தங்கி வேலை செய்து பிழைக்கலாமே?''

அண்ணன் சங்கனுக்குக் கோபம் வந்து விட்டது. ''போடா போ! ஒரு நாளைக்குக் கிடைக்கும், ஒரு நாளைக்குக் கிடைக்காது. அதற்காக இந்தச் சொகுசான வேலையை விட்டு விடுவதா? இதுவும் ஒரு வேலைதானேடா!'' என்று சீறினான். ரங்கன் பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டான்.

அன்று இரவு சங்கன் ஒரு கனவு கண்டான். ஊருக்குக் கிழக்கேயுள்ள மலையின் சிகரத்தில் ஒரு கோயில் இருப்பதாகவும், அங்கேயுள்ள வனதேவதை வேண்டிய வரம் கொடுக்கும் என்றும், அங்கே சென்றால் உங்கள் துன்பம் விலகும் என்றும் தன் கனவில் வந்த முனிவர் சொன்னதாகக் கூறினான் சங்கன்.

உடனே அவர்கள் இருவரும் மலையுச்சியில் உள்ள கோயிலை நோக்கி நடக்கலானார்கள்.

கோயிலை அடைந்ததும் மிகவும் பயபக்தியுடன் தேவதையை நினைத்து வணங்கினார்கள். தேவதையும் அவர்கள் முன் தோன்றியது.

சங்கனுக்கும் ரங்கனுக்கும் மகிழ்ச்சி பொங்கியது. ''தாயே! நாங்கள் அனாதைகள். எங்களுக்கு வாழ வழியில்லை. நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்'' என்று பயபக்தியுடன் வேண்டிக் கொண்டார்கள்.

தேவதை தன் மந்திர சக்தியினால் இரண்டு பெட்டிகளை வரவழைத்தது. ஒரு பெட்டி நிறையத் தங்கக் காசுகள் இருந்தன. இன்னொரு பெட்டியில் விசித்திரமான அழகிய குரங்கு ஒன்று இருந்தது. ஆளுக்கொரு பெட்டியாய் எடுத்துக்கொள்ளும்படி தேவதை கூறியது.





சங்கன் ஓடிப்போய், தங்கக் காசுகள் உள்ள பெட்டியைத் தூக்கிக் கொண்டான். பாவம், ரங்கனுக்கோ குரங்குப் பெட்டி தான் கிடைத்தது.

வனதேவதை புன்முறுவல் செய்தது.

''அன்பர்களே, நீங்கள் புத்திசாலிகளாக இருந்தால் பிழைத்துக் கொள்வீர்கள்'' என்று கூறிய வனதேவதை சங்கனை நோக்கி, ''இந்தத் தங்கக் காசு உள்ள பெட்டி அதிசயமான பெட்டி. இதிலிருந்து ஒரு காசு எடுத்தால் பத்துக் காசு குறையும். ஒரு காசு போட்டால் அது பத்துக் காசாகப் பெருகும். காசு முழுவதும் தீர்ந்து விட்டால் பெட்டி மறைந்து விடும்!'' என்றது. பின்னர் ரங்கனை நோக்கி ''இந்தப் பெட்டியில் உள்ளது அதிசயக் குரங்கு. அதி அற்புதமாக வேடிக்கைகள் எல்லாம் செய்யும். மக்கள் மத்தியில் வித்தைகள் காட்டலாம். நிறையப் பணம் கிடைக்கும். கிடைக்கிற பணத்தை இந்தப் பெட்டியில் போட்டால் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகும். ஆனால் எடுத்தால் ஒன்றும் குறையாது!'' என்று சொல்லி விட்டு மாயமாய் மறைந்து விட்டது.

சங்கனும் ரங்கனும் ஊரை நோக்கிப் புறப்பட்டனார்கள்.

வழியில் ரங்கன் சொன்னான்: ''அண்ணா, இத்தனை காலமும் நாம் ஒன்றாகத்தானே இருந்தோம். இனி மேலும் ஒன்றாகவே இருப்போம்.''

சங்கனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''போடா, போ, உனக்கோ வெறும் குரங்குதானே கிடைத்திருக்கிறது. நீ ஊர் ஊராய் அலைந்து பிழைக்கணும். நானோ தங்கக் காசுகளாகப் பெற்றிருக்கிறேன். வாழ்நாள் முழுவதும் வசதியாய்ச் சாப்பிட இது போதும்!'' என்று கூறிவிட்டான். இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டதால் ஆளுக்கொரு பக்கமாகக் கிளம்பிவிட்டனர்.

குரங்குப் பெட்டியுடன் சென்ற ரங்கன் ஊர் ஊராகச் சென்று வித்தைகள் காட்டினான். குரங்குடன் அவனும் சேர்ந்து உழைத்தான். குரங்கு வித்தைக்கும் அதன் சாகசத்துக்கும் கூட்டம் கூட்டமாய் மக்கள் குழுமினர். பணம் மளமளவென்று குவிந்தது.

ஓர் ஊரில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. அந்த ஊருக்கு ரங்கன் சென்றான். சர்க்கஸுக்குக் கூட்டமே சேரவில்லை. அதிசயக் குரங்கின் ஜால வித்தைக்கே கூட்டம் சேர்ந்தது. அந்தச் சர்க்கஸ் முதலாளி பார்த்தார். ரங்கனைக் கூடுதலான சம்பளத்தில் தம் சர்க்கஸில் சேர்த்துக் கொண்டார்.

ரங்கன் சேருகிற பணத்தை யெல்லாம் அதிசயப் பெட்டியில் போட்டுக் கொண்டிருந்தான். பணம் ஒன்றுக்குப் பத்தாகப்பெருகியது. கடைசியில் அந்தச் சர்க்கஸ் கம்பெனிக்கே முதலாளியாகி விட்டான் ரங்கன்!


ஒரு நாள் ஒரு நகரத்தில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. ஏகப்பட்ட கூட்டம். டிக்கெட்டே கிடைக்கவில்லை.

அனுமதிச் சீட்டு இல்லாமல் நுழைந்ததாக ஒருவனை இழுத்துக் கொண்டு வந்தார்கள், காவலாளிகள். அவன் ரங்கனின் அண்ணன் சங்கன்.

''ரங்கா, உழைப்பின் பெருமையை உணராமல் பணத்தை யெல்லாம் இழந்து விட்டேன். இனி நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். உன் சர்க்கஸ் கம்பெனியில் நானும் உழைத்துப் பிழைக்கிறேன்'' என்றான் சங்கன் கண்ணீர் பெருக.


உழைப்பின் பெருமையை உணர்ந்து விட்ட தன் அண்ணனுக்காக இரக்கப்பட்டான், ரங்கன். தன் சர்க்கஸ் கம்பெனியில் அவனையும் சேர்த்துக் கொண்டான். இருவரும் சுகமாக வாழ்ந்தனர்.





இரகசியம்! அதிசயம்!


திங்கள் தரும் தித்திப்பு



செர்ரி.
பிள்ளைகளுக்குப்
பிடித்தமானது.
சின்னஞ் சிறு
கிண்ணங்களில்
சிங்காரச் செர்ரி
ஒவ்வொருவருக்-
கும் ஒவ்வொன்று!

செவ்வாய் தரும் சிறப்பு:

அன்னாசி.
ருசிக்க ருசிக்க
ரசிக்கலாம்:
உற்றாருக்கும்
உறவினருக்கும்
உகந்தது.
உருசியின்
ஊற்று!




புதன் தரும் புதுமை




ராஸ்பெர்ரி.
ரசமான
ரத்தச் சிவப்பு.
என்றும்
எப்போதும்
உண்ணச்
சிறப்பு!

வியாழன் தரும் விருந்து:

ஸ்ட்ராபெர்ரி.
பாட்டிமார்
ரசிப்பது:
பாப்பாவும்
பெரியவரும்
கூடப் புசிப்பது!




வெள்ளி தரும் அள்ளி:



ஆரஞ்சு.
அள்ளிப்
பருகும் சுவை
ஆரஞ்சுச்
சுவையுடன்
அருமையான
சுவை!

சனி தரும் கனி:

லெமன்.
இனிப்பும்
புளிப்பும்
தருவதில் எமன்
விருந்தினில்
மகிழ்ச்சியை
அளித்திடும்
மன்னன்




ஞாயிறு தரும் ஞாபகம்:



பழச்சுவை மிகுந்த ரெக்ஸ் ஜெல்லியை நினைக்க நினைக்க நாவில் நீர் ஊறும்! க்ரீம் மற்றும் பாதாம் பருப்புடன் கலந் தால் சுவையோ சுவை! சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி போல.




ராமலக்ஷ்மணர்களை விநயத்துடன் வணங்கி நின்றார் மாருதி.
ராஜ கம்பீரத்துடன் விளங்கும் நீங்கள் ஆண்டிகளைப் போல உடுத்தி வனத்தில் சஞ்சரிப்பது ஏன்?
ஜெய் ஹனுமான் (12)
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
அனுமனின் வினவிற்கு அவ்விருவரும் பதிலேதும் கூறவில்லை.
மலை முகட்டிலிருந்து ஒரே தாவலில் தாவி வந்துள்ள என்னை வேஷங்காரன் என்று எண்ணிப் பேசாதிருக்கிறார்கள் போலும். இவர்களிடம் இனி மாறுவேஷத்துடன் பேசக்கூடாது.
ஐயன்மீர்! உண்மையில் நான் ஒரு வானரன். தர்மாத்மாவான சுக்ரீவனின் தூதுவனாக இங்கு வந்திருக்கிறேன். என் பெயர் ஹனுமான்.
தம்பி! இவனுடைய பேச்சிலிருந்து இவன் மகா பண்டிதன் என்று தெரிகிறது. நம்மைப் பற்றி இவனிடம் கூறு.
அண்ணனின் ஆணைப்படி லட்சுமணர், தந்தையின் வாக்கைக் காக்கக் கானகம் வந்து சீதா தேவியைத் தேடி அலையும் வரை சுருக்கமாகக் கூறினார்.


சாபவிமோசனமும் பெற்ற
கபந்தன், சுக்ரீவன் என்பவனின்
நட்பை நாடும்படி எங்களுக்
குக் கூறி மேலுலகம் சென்றான்.
அந்த சுக்ரீவனைத் தேடியே
இங்கு வந்தோம்.
கபந்தனின் வர்ணனைப்படி ராமபிரானை
சாட்சாத் நாராயணனாகவே கண்டார்
அனுமார்.
இனி உங்களுக்கு நான்
அடிமை
அண்ணன் வாலியால்
வீடிழந்து வாழ்விழந்து தவிக்கும்
சுக்ரீவனுக்கு நீங்கள் உதவ
வேண்டும். அவனும் உங்களுக்கு
உதவுவான்.
இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்
தார் ஆஞ்சநேயர்.
ராமலக்ஷ்மணர்களைத் தம் தோள் மீது
ஏற்றிக் கொண்டு மன்னன் சுக்ரீவ
னின் இருப்பிடத்துக்கு
விரைகிறார் அனுமார்.
உனக்குக் கொடுமை செய்து உன் மனைவி
யையும் அபகரித்துக் கொண்ட வாலியை
நாளை கொன்று உனக்கு முடிசூட்டு
வேன். கவலைப்படாதே.
நான் அரசனான பின்
என் வானரப்படைகளை
யெல்லாம் நான்கு திசை
களுக்கும் அனுப்பி
அன்னை சீதாதேவியைக்
கண்டு பிடித்து மீட்டுத்
தருவேன். இது சத்தியம்.

தொடரும்



கஸ்தூரி குடும்பம்

அ. ராம்கோபால்

கட்டுக்கடங்காத கும்பலைக் கலைக்கப் போலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததாக நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். இந்தக் கண்ணீர்ப் புகை என்பது என்ன?

கண்ணீர்ப் புகைக்கு விஞ்ஞான சாஸ்திரப் பெயர் ''புரோமேசிடோன்'' (*Bromecetone*) என்பதாகும். கரி கலந்த கூட்டுப் பொருள்களில் (*Compounds*) ஆசிடோன் (*Acetone*) முக்கியமானது. இந்த ஆசிடோனில் ஹைட்ரஜன் இடத்தில் புரோமின். (*Bromine*) புகுத்தப்பட்டால் அது புரோமேசிடோன் எனப்படும் கண்ணீர்ப் புகையாக மாறிவிடுகிறது. இந்தக் கண்ணீர்ப் புகை உண்மையில் புகை உருவில் இருப்பதில்லை. இது திரவ உருவிலான ஒரு பொருள். குண்டுகளில் இதை அடைத்து வீசும்போது வெப்பத்தால் இது ஆவியாக மாறுகிறது. அப்படி அது ஆவியாக மாறும்போதுதான் கண்ணீர்ப் புகை எனப்படுகிறது.

குளோரோஃபார்ம்

ஆஸ்பத்திரிகளில் பெரிய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியதிருக்கும் நோயாளிகளுக்கு வலி உணர்ச்சி தோன்றாதிருக்கக் குளோரோஃபார்ம் கொடுக்கிறார்கள். இந்தக் குளோரோஃபார்ம் ஆசிடோனிலிருந்தே தயாரிக்கப்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் புகுந்ததும் அங்கு மூக்கைத் துளைக்கும் ஒரு நெடி வீசுகிறதே, இந்த வாடை அயோடோஃபார்மிலிருந்து வெளிப்படுவதாகும். இந்த அயோடோஃபார்மும் ஆசிடோனிலிருந்தே தயாரிக்கப்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்குத் தூக்கம் உண்டாக்க சல்போனல் என்னும் ஒரு மருந்து பயன்படுகிறது. இதுவும் ஆசிடோனிலிருந்து தயாரிக்கப்படுவதேயாகும்.

வளையும் கண்ணாடி

விமான ஜன்னல்களுக்கு உடையாத ஒருவகைக் கண்ணாடி பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கண்ணாடியை வளையும் கண்ணாடி (*Flexiglass*) எனச் சொல்லுவார்கள். இந்தக் கண்ணாடியும் ஆசிடோனிலிருந்து தயாரிக்கப்படுவதேயாகும். இந்தக் கண்ணாடி உடைந்தாலும் இதனால் விமானப் பிரயாணி

களுக்குத் தீமை எதுவும் ஏற்படுவதில்லை. இந்தக் கண்ணாடி தயாரிக்கப்படும் ஆசிடோன் பிளாஸ்டிக்கை மெதில் மீதேஸிலேட் எனக் கூறுவார்கள்.

விட்டமின் K

எவருக்காவது சிறு காயம் ஏற்பட்டால் சிறிது நேரத்தில் ரத்தம் வடிவது தானாகவே நின்று விடும். சிலருக்குச் சிறு காயம் பட்டாலும் ரத்தம் நிற்காது. வடிந்து கொண்டேயிருக்கும். யார் உடலில் விட்டமின் K போதுமான அளவு இருக்கிறதோ அவர்களின் உடலில் சிறிய காயம் பட்டால் சிறிது நேரத்தில் ரத்தம் வடிவது தானாகவே நின்று விடும். இந்த வைடமின் யார் உடலில் போதுமான அளவு இல்லையோ அவர்கள் உடலில் சிறுகாயம் பட்டாலும் ரத்தம் வடிந்து கொண்டே இருக்கும். இலேசில் நிற்காது. நம் குடலில் உள்ள சில பாக்டீரியாக்கள் இந்த விட்டமினை உற்பத்தி செய்கின்றன. தாயின் வயிற்றில் குழந்தைகள் இருக்கும் போதே அவற்றின் குடலில் இந்தக் கிருமிகள் உற்பத்தியாகி விடுகின்றன. தாயின் உடலில் உள்ள இக்கிருமிகள்தான் குழந்தையின் குடலில் வைட்டமின் K சத்து உற்பத்தியாக உதவுகின்றன. கருவுற்றுள்ள பெண்ணின் உடலில் வைடமின் கே. சத்துக் குறைவாக இருந்தால் ஊசி மூலம் அதை உடலுக்குள் செலுத்துவார்கள். இந்த வைடமின் K ஒரு வகை கிடோன் (*Ketone*) ஆகும். கிடோனின் ஒரு வகைதான் முன் கூறிய ஆசிடோன்.



நீரிழிவு

கிடோனில் பல வகை உண்டு. டைமெதில் கிடோனுடன் பிராண வாயு சேர்ந்து அசிடிக் அமிலமாக (*Acetic Acid*) மாறுகிறது. இந்த அசிடிக் அமிலமே அசிடோன் எனப்படுகிறது. ஆகவே அசிடோன் ஒரு முக்கிய கிடோன் பொருளாகும். நம் இரத்தத்திலும் சிறுநீரிலும் கூட ஆசிடோன் சிறிதளவு கலந்துள்ளது. நீரிழிவு நோய் பற்றியுள்ளவர்கள் உடலில் இந்த ஆசிடோனின் அளவு அதிகமாக இருக்கும். உடலில் இன்சுலின் அளவு குறைவுபடுவதால் ஆசிடோன் அளவு கூடுவதால் அது சிறுநீர் வழியாக வெளியேறியது போக அதிகமாக இரத்தத்தில் மிஞ்சுகிறது. இந்த அதிகப்படி ஆசிடோன் இரத்தத்தின் வழியாக நுரையீரலை அடைந்து அங்கிருந்து காற்றின் வழியாக வெளியேறுகிறது. ஆகவே நீரிழிவு நோய்க்காரர்கள் சுவாசம் விடும்போது அதில் ஆசிடோன் மணம் வீசும். இன்சுலினை ஊசி மூலம் செலுத்தி இப்போது நீரிழிவுக்குப் பரிகாரம் காணுகிறார்கள்.

ஆசிடோன் ஒரு சிறந்த கரைப்பானாகும். (*Solvent*) செல்லுலோஸ், நைட்ரோ செல்லுலோஸ் ஆகியவை இதில் எளிதாகக் கரைகின்றன. நகப்பூச்சு (*Nail Polish*) நகப்பூச்சு நீக்கி (*Nail Polish Remover*) ஆகியவை தயாரிக்க எதில் அசிடேட் (*Ethyl acetate*) பயன்படுகிறது. தொழில் துறையில் உலோகங்களை ஒட்ட வைப்பதற்கும், பொருத்துவதற்கும் ஆக்ஸி அசிடிலி ஜ்வாலை (*Oxi acetile flame*) வெகுவாகப் பயன்படுகிறது. இந்த ஜ்வாலை எரிய உதவுவது ஆசிடிலின் ஆவியாகும். இந்த ஆவி ஆசிடோனில் கரையக் கூடியது. ஆகவே ஆசிடோனில் அதைக் கரைத்துத் தேவையான இடங்களுக்கு எளிதாக எடுத்துச் சென்று பயன்படுத்த முடிகிறது.

கஸ்தூரி

ஆண் கஸ்தூரி மானின் நாபி அருகேயிருந்து கஸ்தூரி கிடைக்கிறது. ஒரு மானிலிருந்து சுமார் 30—35 கிராம் கஸ்தூரி கிடைக்கிறது. இந்தக் கஸ்தூரிக்கு நல்ல மணம் அளிப்பது அதில் அடங்கியுள்ள மஸ்கோன் (*Muskone*)

என்ற பொருளாகும். ஒரு கஸ்தூரி மானில் கிடைக்கும் கஸ்தூரியில் அடங்கியுள்ள மஸ்கோனின் அளவு சுமார் கால் கிராம்தான். இந்த மஸ்கோன் கிடோன் வகையைச் சேர்ந்ததாகும். புனுகுப் பூனையிலிருந்து கிடைக்கும் புனுகுக்கு மணம் ஊட்டுவது சிவிடோன் (Civetone) என்ற ஒரு பொருளாகும். இதுவும் ஒரு 'கிடோன்'தான்.

வர்ணம்

க்வினோன் என்பது ஒரு டைமெதில் கிடோனாகும். அதிலிருந்து பலவித செயற்கை வர்ணங்கள் தயாரிக்கப்படுகின்றன. மாடர் என்ற செடியின் சாற்றிலிருந்து எலில் ஜரின் என்ற மிக உயர்ந்த சிவப்பு வர்ணம் தயாரிக்கப்படுகிறது. இதுவும் ஓர் அந்த்ரகுவினோன் ஆகும்.

ஹார்மோன்

ஆண், பெண்களின் உருவத்தில் பல வேறுபாடுகளைக் காணுகிறோம். இந்த வேறுபாடுகளை உடலில் உள்ள பால் சம்பந்தமான உட்சுரப்பி உண்டாக்கும் சில வகை ரசாயன நீர்கள் ஏற்படுத்துகின்றன. இந்த ரசாயன நீரை ஹார்மோன் எனச் சொல்லுவார்கள். ஆண் தன்மையை உண்டாக்கும் ஹார்மோன் டெஸ்டோஸ்ட்ரோன்- பெண் தன்மையை உண்டாக்கும் ஹார்மோன் ஈஸ்ட்ரின் எனப்படும். இந்த இரண்டு ஹார்மோன்களும் கிடோன் இனத்தவையே ஆகும். அட்ரினல் என்ற உட்சுரப்பி (Adrenal gland) சுரக்கும் அட்ரினலின் நமக்குக் கோபம், பயம் போன்ற உணர்வுகளை உண்டாக்குகின்றது. இதுவும் ஒருவகை கிடோனேயாகும்.

கார்டைட் (Cordite) என்னும் வெடி மருந்து 1889லிருந்து பீரங்கிகள் சுடுவதற்குப் பயன்பட்டு வருகிறது. இது 58 பங்கு நைட்ரோ கிளிசரின், 37 பங்கு கன் காட்டன் (Gun cotton), 5 பங்கு வாஸ்லின் சேர்த்துச் செய்யப்படுகிறது. இந்தக் கார்டைட் வெடி மருந்தும் ஒரு வகை ஆசிடோனேயாகும்.

மேலே குறிப்பிட்ட எல்லாமே கஸ்தூரி குடும்பத்தைச் சேர்ந்தவை எனக் கூறலாம்.

ஓ! அப்படியா?


பட்டு: அது என்ன உன் வாயிலே எதையோ கௌவிக் கொண்டு போகிறாயே, முட்டையா ?

எறும்பு: அது முட்டையில்லை. நீ நினைப்பது போல் நான் சாதாரண எறும்புமில்லை. நான் பட்டு நெசவாளி இனத்தைச் சேர்ந்த எறும்பு.

பட்டு : பட்டு நெசவாளியா ? நீ ஆடை செய்வாயா என்ன ?

எறும்பு: ஆமாம். நெசவாளி துணி நெய்யும் போது நீ பார்த்திருக்கிறாயா ? ஊடு பாவு நூல்களுக்கு நடுவே மரத்தினால் ஆன ஒரு கருவி இங்கும் அங்குமாக ஓடுமே தெரியுமா ? நெசவு நூல் நாழி (Shuttle) என்று அதற்குப் பெயர். நான் வாயில் கவ்விக் கொண்டிருப்பது அந்த நாழிக் கருவிதான். ஆனால் இது உயிருள்ளது. எங்கள் இனத்தின் கூட்டுப் புழு (லார்வா) இது. பட்டு நூலினால் கூடு கட்டி அதில் எங்கள் குழந்தைகளை வசிக்கச் செய்வோம். அந்தப் பட்டு நூல் கூடு கட்டுவதற்கு இந்தப் புழுக்களை ஷட்டிலாகப் பயன்படுத்துகிறோம். இதை ஷட்டில் போல மேலும் கீழும் இயக்கும்போது இந்தக் கோக்கூன்களிலிருந்து (Cocoon) பட்டு நூல் வெளிப்படும். அதைக் குறுக்கும் நெடுக்குமாகக் கோலமிட்டபடி நெய்து கூடு தயாரித்து விடுவோம்.

உங்களைப் போல் எங்கள் குழந்தைகளும் பட்டுத் தூளியிலும், பட்டு விரிப்பிலும் பாங்காய் வளருகின்றன. எங்கள் இனத்துக்கு ஆங்கிலத்தில் எக்கோ ஃபைலா ஸ்மராக்டினு (Ecophylla Smaragdina) என்று பெயர்.



பயம் தெளிந்தது!

ராமன் சரியான தொடை நடுங்கி. காகம் 'கா' என்று கத்தினால்கூடப் பயந்து ஓடுபவன். இரவு ஆறு மணிக்கு மேல் எங்கேயும் போகமாட்டான். தோட்டத்துக்குச் செல்வதானால்கூடத் தன் அம்மாவை அழைத்துச் செல்வான்.

ஒரு நாள் இரவு அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று 'ஹோ'வென்று பெரிய சத்தம் கேட்டது. அந்த ஊர் மக்கள் அனைவரும் அலறிப் புடைத்துக் கொண்டு தடதடவென்று ஓடி வந்தனர். வழியில் வருவோர் எல்லோரையும் வேறு பக்கம் ஓடச் சொல்லி அவர்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர். அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க ஓடி வந்த ராமனை நோக்கி ஒருவன், ''ராமா! ஓடிப்போ! அங்கு ஒரு பெரிய சிங்கம் உட்கார்ந்து கொண்டிருக்கிறது'' என்று நடுங்கியபடி கூறினான். ராமனும் வந்த வழியே ஓட ஆரம்பித்தான். திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. ''எல்லாரைப் போல் ஏன் நானும் இனி தைரியமாக இருக்கக் கூடாது!'' என்று நினைத்துக் கொண்டான். உடனே கையில் ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு சிங்கம் இருக்கும் இடத்துக்கு ஓடினான். இதைக் கண்ட அவ்வூர் மக்கள் இந்தத் திடீர் அசகாய சூரனின் வீரச் செயலைக் காண அவன் பின்னால் மெதுவாகச் சென்றனர்.

ராமன் சிங்கம் இருக்கும் இடத்தை அடைந்தான். சிங்கம் பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டிருந்தது. அதைக் கேட்டதும் ராமன் வெலவெலத்துப் போனான், பாவம்! அச்சமயம் அந்த ஆண் சிங்கம் அவனைப் பார்த்துத் தன்னுடைய முன் காலினை மேலும் கீழும் ஆட்டிற்று. இதைப் பார்த்ததும் ராமன், தன்னைச் சிங்கம் 'வா'வென அழைக்கின்றது என நினைத்துப் பயத்துடன் தடியைப் பிடித்துக் கொண்டே மெல்ல மெல்ல அதன் அருகில் சென்றான். கிட்ட நெருங்கிப் பார்த்தபின்தான் அவனுக்கு விவரம் புரிந்தது. அதன் முன் காலில் ஒரு பெரிய முள் குத்தியிருப்பதைக் கண்டான். ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அவன், அதன் காலிலிருந்து அந்த முள்ளை மெதுவாக எடுத்தான். அருகில் உள்ள குளத்தில் கர்சீப்பை நனைத்து அதன் காலில் கட்டினான். சிங்கத்துக்குக் காலில் அடிபட்ட வலியின் வேதனை சரியாகிவிட்டது போலும்! சிறிது நேரத்தில் அது எழுந்து அவனை நன்றியோடு பார்த்துவிட்டுக் காட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

இந்த அதிசயக் காட்சியைக் கண்ட அவ்வூர் மக்கள் ராமன் கழுத்தில் வழக்கம்போல் ஆள் உயர ரோஜா மாலை ஒன்றினைப் போட்டு, ''வீரன் ராமு வாழ்க! தீரன் ராமு வாழ்க!'' என்று கோஷமிட்டுத் தூக்கிக் கொண்டு வந்தனர். அப்போது ஒரு பெரிய இராட்சதக் கழுகு ராமு கழுத்தில் உள்ள சிவப்பு நிற மாலையை, ஏதோ ஒரு தின்பண்டமென எண்ணிப் பறந்து வந்து விர்ரென்று மேலே தூக்கியது. மாலையோடு ராமுவும் மேலே போனான். ராமு அப்போது பயத்தில் 'அம்மா அம்மா' என்று அலறினான். அதற்குள் ராமுவின் அம்மா ஓடி வந்து, ''ராமு! எழுந்திரு! எழுந்திரு! கனாக்கண்டாயா என்ன?'' என்று கேட்டாள்.

ராமு திடுக்கிட்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். 'இனி எதற்கும் பயப்படுவதில்லை' என்று உண்மையிலேயே அவன் தீர்மானம் செய்து கொண்டான்.

— ரவி



மொகலாய பாதுஷா அக்பரின் அரண்மனையில் தர்பார் கூடியிருந்தது. அவரது தர்பாரில் அறிவில் சிறந்த ஒன்பது பேர் இருந்தனர். அவர்கள் நவரத்தினங்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் ராஜா வீர்பல். நகைச்சுவை மிளிர விடையளிப்பதில் வல்லவர். பதில்கள் நறுக்குத் தெறித்தாற்போல் இருக்கும். தாம் சொல்வதைப் பிறர் உள்ளத்தில் பதிய வைப்பதில் அவருக்கு ஈடு இணை கிடையாது.

அன்று பேச்சுவாக்கில் கடவுளின் அவதாரங்களைப் பற்றிப் பேச்சு வந்தது. இஸ்லாமிய மதம் அவதாரத்தை ஏற்பதில்லை. ஆண்டவனுக்கு உருவம் கிடையாது என்பது அம்மதத்தின் கருத்து. ஆனால் ஹிந்து மதமோ உருவமற்ற ஆண்டவனுக்கு உருவம் கற்பிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவன் எப்படியெல்லாம் அவதாரங்கள் எடுத்துத் தம் மக்களைக் காப்பாற்றுகிறான் என்பதையும் கதைகதையாகக் கூறுகிறது. இந்து மதக் கோட்பாட்டின்படியும் ஆண்டவன் உருவமில்லாதவன்தான் என்றாலும் மக்களின் மனத்திலே இறையுணர்வைப் பதிய வைக்க இம்முறையை தேர்ந்தெடுத்துள்ளது. இஸ்லாத்துக்கும் இந்து மதத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறியக் கருதி, அக்பர் கேட்டார்:

''ஆண்டவனுக்குத்தான் எத்தனையோ ஊழியர்கள் இருக்கிறார்களே! தம் பக்தர்களைக் காப்பாற்ற அவர் ஏன் அவதாரம் எடுத்து வர வேண்டும்? ஊழியர்களை ஏவினால் போதாதா? பக்தர்களைக் காப்பாற்ற ஏன் பத்து அவதாரங்கள் எடுக்க வேண்டும்? அறுபத்து மூன்று திருவிளையாடல்கள் புரிய வேண்டும்?''

அக்பரோ சக்கரவர்த்தி. அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர எத்தனையோ பணியாட்கள் இருந்தார்கள். என் என்றால் எண்ணெயாக நின்றார்கள். தமது குடிபடைகளுக்கு ஏதாவது கஷ்டம் நேர்ந்தால் அக்பர் தமது பணியாட்களை அனுப்பியே கவனித்து வந்தார். ஆண்டவன் அவரைக் காட்டிலும் பேரரசர் அல்லவா? அவர் தம் பக்தர்களைக் காப்பாற்ற இப்படி விழுந்தடித்துக் கொண்டு அவதாரம் எடுத்து ஏன் ஓடி வரவேண்டும்? — இந்த எண்ணத்தில் ஏளனமாகப் பேசிவிட்டார் அக்பர். தர்பாரில் உள்ள அத்தனை அறிவாளிகளும் விடை சொல்லத் தெரியாமல் விழித்தனர். ஆண்டவனின் அவதார இரகசியத்தை யாரே அறிந்தவர்?

''ஏன் வீர்பல்! உனக்குக்கூடவா ஒன்றும் விடை தோன்றவில்லை?'' என்று கேலியாகக் கேட்டார் அக்பர்.

''ஊஹூம்! ஒரு மாதம் அவகாசம் கொடுத்தால் முயன்று பார்க்கிறேன்'' என்று அடக்கமாகப் பதில் சொன்னார் வீர்பல்.

ஏறக்குறைய ஒரு மாதம் ஆகிவிட்டது. எல்லாருமே இந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டனர். வீர்பலால்கூடப் பதில் சொல்ல முடியாது என்ற எண்ணத்தில் அக்பரும் இந்தக் கேள்வியை மீண்டும் எழுப்பவில்லை.


ஒரு நாள் வீர்பல் அக்பர் பாதுஷாவிடம், ''அரசே! நாம் ஒருநாள் யமுனையில், உல்லாசமாகப் படகுப் பயணம் போய் வந்தால் என்ன?'' என்று கேட்டார்.

''தாராளமாக. நானும் இதையேதான் நினைத்துக் கொண்டிருந்தேன்! வருகிற பௌர்ணமி நிலவில் போய் வருவோம்!'' என்று பாதுஷா நாளும் குறிப்பிட்டுவிட்டார்.

மன்னரது உல்லாசப் படகு அலங்கரிக்கப்பட்டுத் தயாராக நின்றது. பணியாட்கள் பலரும்

அவதார ரகசியம்

மழலைக் குறும்பன்



சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். அழைப்பினர் அனைவரும் வந்துவிட்டனர். ஏன், அக்பர் பாதுஷாகூட வந்துவிட்டார். ஆனால் வீர்பலைத்தான் காணவில்லை!

குறித்த நேரமும் கடந்துவிட்டது. பாதுஷாவின் முகத்தில் கடுமை பரவியது. பணியாட்களை அனுப்பி வீர்பலை அழைத்து வர அவரது ஆணவம் இடம் கொடுக்கவில்லை. ''வீரபல் வரா விட்டால் பரவாயில்லை. படகை அவிழுங்கள்!'' என்று உத்தரவிட்டார்.

அதே சமயம் பரக்கப் பரக்க வீர்பல் ஓடி வருவது தெரிந்தது. ''மன்னிக்க வேணும், பாதுஷா!'' என்று கூவிய வண்ணமே படகில் ஏறினார் வீர்பல்.

''ஏன் இவ்வளவு நேரம்?'' என்று முகத்தில் கடுமை தெறிக்கக் கேட்டார் அக்பர் சக்கரவர்த்தி.

''தங்களுடனேயே வந்துவிடலாம் என்று எண்ணி அரண்மனைக்குப் போனேன். தாங்கள் புறப்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். என்னைக் கண்டதும் இளவரசர் பிடித்துக்கொண்டுவிட்டார். நானும் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தார். இதுவோ பனிக் காலம். இப்பொழுதுதான் இளவரசரின் உடல்நிலை தேறியிருக்கிறது. உடம்புக்கு ஆகாது என்று சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. அழத் தொடங்கிவிட்டார். அழுதால் உடம்பு கெட்டு விடுமே என்று பயந்து அவரையும் கூட அழைத்து வந்துவிட்டேன். அதனால் தான் நேரமாகி விட்டது. கவலைப் படாதீர்கள். பனி அடிக்காமல் இருக்கத் தேவையான உடைகள் அணிவித்தே அழைத்து வந்திருக்கிறேன்!'' என்றார் வீர்பல்.

கோபத்தில் இருந்த சக்கரவர்த்தி இத்தனை நேரமும் வீர்பலின் தோளைக் கவனிக்கவில்லை. காலிலிருந்து தலைவரையில் கம்பளி உடையால் போர்த்தப்பட்டு இரண்டரை வயதே ஆன இளவரசர் வீர்பலின் தோளை அலங்கரித்துக் கொண்டிருந்தார். உதடுகளில் சிரிப்பும், ஓரக் கண்ணில் குறும்பும் தாண்டவமாட. அதைக் கண்டதும் அக்பரின் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிட்டது. மகிழ்ச்சியுடன் படகு புறப்பட உத்தரவிட்டார்.

வீர்பல் முதலிய அவையோருடன் பேசிக் கொண்டே அக்பர் நீரின் அழகைக் காணப் படகின் ஓரத்துக்கு வந்தார். வீர்பல் இளவரசரைத் தோளிலிருந்து இறக்காமல் கைப் பிடிச் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தார். இதே சமயம் குழந்தை நெளிந்தாற் போலிருந்தது. அடுத்த கணம், ''ஐயோ, இளவரசர்!'' என்ற வீர்பலின் கூக்குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து ஆற்று வெள்ளத்தில் தொப்பென்று விழுந்த சத்தம் வந்தது.



''ஐயோ, என் குழந்தை!'' என்று வீறிட்ட அக்பர் பணியாட்கள் எவரையும் ஏவவில்லை. தொப்பென்று ஆற்று வெள்ளத்தில் குதித்து விட்டார். தம் உயிரையே பணயம் வைத்துக் குழந்தையை எப்படியோ ஆற்றிலிருந்து மீட்டு வந்தார். படகில் வந்தபின் பற்களைக் கடித்துக் கொண்டு, ''என்ன அஜாக்கிரதை!'' என்று வீர்பலைக் கடிந்தார்.

வீர்பல் சிரித்தார். ''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது?'' என்று சீறினார் அக்பர். இளவரசருக்கு ஏதும் ஆபத்து இல்லையே என்று பார்க்கப் போர்வையை விலக்கினார்.

''என்ன இது?''

''மெழுகுப் பொம்மை! இளவரசரைப் போலவே அச்சாக வார்த்தது!'' என்றார் வீர்பல்.

''என்ன வேடிக்கை இது?''—அக்பர் சினந்தார்.

''வேடிக்கை இல்லை, சக்கரவர்த்தி! இன்றைக்குச் சரியாக முப்பது நாட்களுக்கு முன் ஒரு கேள்வி கேட்டீர்களே, அதற்கு விடை இது!''


''என்ன சொல்கிறாய் நீ?''

'' 'ஆண்டவன் தம் பக்தர்களைக் காப்பாற்ற அவதாரம் ஏன் எடுக்க வேண்டும்? ஊழியர்களை அனுப்பினால் போதாதா?' என்று நீங்கள் கேட்கவில்லையா?''

'' ஆமாம். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

'' நிறைய இருக்கிறது. இந்தப் படகில் நீங்கள் காலால் ஏவும் வேலையைத் தலையால் செய்ய எத்தனையோ பணியாட்கள் இருக்கிறார்கள். ஆற்றில் விழுந்த இளவரசரைக் காப்பாற்ற நீங்கள் ஆட்களை ஏவியிருக்கலாமே! அதற்குப் பதிலாகத் தாங்களே நீரில் குதித்துவிட்டீர்களே! ஏன்? தங்கள் குழந்தை என்ற பாசத்தினால்தானே? அதே போல் ஆண்டவனும் தம் பக்தர்களுக்கு ஏதேனும் இன்னல் ஏற்பட்டால் அதைக் களைய இன்னொருவர் கையை எதிர்பார்ப்பதில்லை. தாமே தோன்றி இரட்சிக்கிறான். இதுவே அவதார இரகசியம்!'' என்றார் வீர்பல்.

வீர்பலின் விடையைக் கேட்டு அக்பர் பாதுஷாவின் மனம் நிறைந்தது.



4 மந்திரக் கம்பளம்

வாண்டுமாமா

அக்கினி அரக்கனை வென்று வருவதாகக் கூறிச் சென்ற விசித்திரபுரியின் மூன்றாவது இளவரசன் மோகனரங்கன் மூன்று மாதங்களாகியும் திரும்பி வரவில்லை. அவனைப் பற்றிய தகவலும் தெரியவில்லை. மன்னர் மந்தஹாஸரின் செல்லப் பிள்ளை அவன். அவன் மறைவு அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. அழுது அழுது அவர் முகம் வீங்கிப் போயிற்று. முன்பே பருத்த முகம், இப்போது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''ஏதோ எங்கேயோ எப்படியோ தவறு ஏற்பட்டிருக்கிறது'' என்றான் பட்டத்து இளவரசன் கீர்த்தி. அப்பாவின் அழுகை அவனால் சகிக்க முடியாததாக இருந்தது. அவரைச் சமாதானப்படுத்தாவிட்டால் சிவந்த அவருடைய மூக்கு இன்னும் பழுத்து வெடித்துப் போகுமோ என்று நினைத்தபோது சிரிப்புத்தான் வந்தது கீர்த்திக்கு. ஆனால் சிரிக்க இது சமயமல்ல என்று, ''வழி வழியாக வந்துள்ள வரலாற்றுச் செய்திகளின்படியும், நம் முன்னோர்கள், மூதாதையர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒப்பு நோக்கும்போதும் எப்போதுமே கடைசி இளவரசன்தான் இத்தகைய வீரச்செயல்களில் வெற்றிவீரனாக, வாகை சூடியாக வருவது வழக்கம். ஆனால் அந்த முறை இன்று இங்கு ஏனோ பொய்த்து விட்டது. போனால் போகட்டும். என் தம்பி இன்பவண்ணன் எப்படியும் வெற்றியோடு வருவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவனை அனுப்பி வையுங்கள், அக்கினி அரக்கனை அழித்து வர'' என்றான் கீர்த்திவர்மன்.

மூக்கைச் சிந்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு இன்ப வண்ணனை அழைத்து வரும்படி ஆணையிட்டார் மந்தஹாச மகாராஜா. இரண்டாவது இளவரசனான இன்பவண்ணனும் வந்தான். மோகனரங்கனைப் போலத் தன் வீரத்தைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளக் கூடியவன் அல்ல இவன். கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவன். அலங்கார புருஷன்.

''இன்பவண்ணா, என் மகனே!'' என்றார் மந்தஹாஸர். அதற்கு மேல் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, ''கடமை உன்னை அழைக்கிறது. வெற்றித்தேவதை உனக்கு மாலை சூட்டி மகிழ்விக்கக் காத்திருக்கிறது. (கீர்த்தியின் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு மந்தஹாசருக்கும் ராயசமாகப் பேச வந்துவிட்டது!) அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் வெட்டிக் கொண்டு வரும் உன்னைக் கட்டித் தழுவிக் கொள்ளக் காத்திருக்கிறேன் இங்கே. வெற்றியோடு திரும்பும் உனக்கே இந்நாட்டின் மணிமுடி. உன் அண்ணன் கீர்த்தியைக் கல்விச்சாலையின் தலைவனுக்கு

வேன். அவனுக்கு ஏற்ற இடம் அதுதான். என் அருமை மகனே சென்று வா.... வென்று வா!'' என்றார்.

தந்தையின் விருப்பம், நாட்டு மன்னரின் ஆணையை மறுக்க முடியுமா? மூன்று மாதங்களுக்கு முன்பு போன தம்பி திரும்பாதது அவன் நெஞ்சை என்னவோ செய்தது. ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

ஆனாலும் என்ன? அக்கினி அரக்கனைச் சந்திக்கப் போவதை ஒத்திப் போட முடியுமா? மறுநாள் தன் குதிரையின் மீதேறிக் கிளம்பினான்-ஈட்டி, வாள், கேடயம், இரும்புக் கவசம் இத்தனையுடனும்தான். ஆனால், அவ்வளவுதான்! அவனும் திரும்பி வரவில்லை. அந்த அரக்க மிருகம் அழிக்கப்படவும் இல்லை.

மாதங்கள் பலசென்றன. மன்னரின் கண்ணீரும் கதறலும் ஒரு வழியாக அடங்கிய பிறகு ஒரு நாள் கீர்த்தியிடம் வந்தார். ''மூத்தவனே! முதலில் போயிருக்க வேண்டியவனே! கடைசியில் நீயும் போக வேண்டிய வேளை வந்துவிட்டது. அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் உன் வாளினால்தான் வெட்டப்பட வேண்டுமென்று இருக்கிறதோ என்னவோ! இந்த நாட்டின் அரியணை உன்னுடையதாகலாம். ஆனால் என்னுடைய இன்ப வண்ணனையும் மோகனரங்கனையும் இனி யார் எனக்குக் கொடுக்க முடியும்?'' என்றவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் தொண்டை கம்மியது.

''அப்பா! உங்கள் உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இனியாவது உங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்'' என்றான் கீர்த்தி. மன்னர் மௌனமாக அவனைத்



தம் பார்வையால் குத்தினர். அவன் தொடர்ந்தான். ''பயங்கரமானதும் கொடியதுமான அந்த மிருகத்தைக் கொல்லுவதற்காக உங்கள் பிள்ளைகளை அனுப்பினீர்களே, எதற்காக? உங்களுக்குப் பிறகு — உங்கள் மரணம் சமீபத்தில் ஏற்படக் கூடாதென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்! — இந்த நாட்டை ஆளும் தகுதி யாருக்கு என்பதை முடிவு கட்டுவதற்காகத்தானே? இன்றைய நிலையில் தகுதி யாருக்கு என்ற வினவே அவசியமற்றதாகிவிட்டது. உங்களால் வெறுக்கப்படும் நான் ஒருவனே இன்று இந்த நாட்டின் ஒரே வாரிசு. ஆகவே என்னையும் அந்தக் கொடிய அக்கினி அரக்கனைக் கொன்று வரும்படி அனுப்புவது தேவையில்லாததும் தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். நீங்கள் பூரணமாக நம்புவது போல் அந்த மிருகம் என் தம்பிகளுக்கு அளித்த முடிவையே எனக்கும் அளிக்குமானல் விசித்திரபுரியின் சிங்காதனம் அதில் உட்காருவதற்கான தகுதி படைத்தவர் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்குமே. நான் அந்த மிருகத்தைக் கொன்று திரும்பினல்தானு எனக்கு இந்நாட்டை ஆளும் உரிமை கிடைக்கும்? அது இல்லாமலேயே அந்த உரிமைக்குரியவனுக இப்போது நான் ஒருவன்தானே இருக்கிறேன். என்னையும் இழக்க விரும்புகிறீர்களா என்பதை நாட்டிலுள்ள நல்லோர் பெரியோரைக் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வாருங்கள்'' என்ருன் இளவரசன்.

நியாயமான இந்த வாதத்துக்கு மந்த்ஹாசரால் பதில் கூற முடியவில்லை. மௌனமாகத் தம் அரண்மனைக்குத் திரும்பினர் மன்னர். தனிமையில் அமர்ந்து சிந்திக்க வேண்டும் போல் இருந்தது அவருக்கு. கீர்த்திக்கும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன.

விசித்திரபுரி அரண்மனை களை இழந்து கலகலப்புக் குன்றி மகிழ்ச்சி மறைந்து காணப்பட்டது. எல்லோருடைய முகங்களிலும் சோகம் கப்பிக் கிடந்தது. இளவரசர்கள் இருவரை இழந்த வேதனை மன்னருக்கும் மற்றவர்களுக்கும். அதே சமயத்தில் கீர்த்திவர்மன் அக்கினி அரக்கன் விஷயத்தில் தப்பித்துக் கொண்டதும் அவர்கள் மனத்தைப் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. அவனேடு வாதிட்டு வழிக்குக் கொண்டு வர யாராலும் முடியவில்லை. ராணி ரத்தினவதி மட்டும் தான் கீர்த்தியின் பக்கம். ஏனென்ருல் அவனுக்கும் இந்த மந்திரம் தந்திரம் இவைகளில் நம்பிக்கை கிடையாது. அக்கினி அரக்கன் என்று ஒன்று இருப்பதாக அவன் நம்ப மறுத்தான். அம்மாவைத் தவிர அத்தனை பேரும் அவனுக்கு எதிரிகளானர்கள். அவனைக் கோழை, வீரம் இல்லாதவன், பயங்கொள்ளி என்றெல்லாம் ஏசினர்கள். அந்த ஏச்சுப் பேச்சுக்களை அறிவாளியான கீர்த்தி இலட்சியமே செய்யவில்லை.



ஆனால்... அறிவை வளர்க்கும் கீர்த்தி தன்னுடைய ஆராய்ச்சிகளுக்கு அப்பால், எல்லோரையும் போல் உல்லாசமாகப் பொழுது போக்க விரும்பும்போது அத்தை மகள் கனகாவையும், மாமன் மகள் மஞ்சுளாவையும்தான் நாடிப் போவான். விளையாட்டாக அவர்களுடன் ஏதாவது பேசிச் சிரித்துக் கொண்டிருப்பான். இப்போது அவர்களும் இவனைக் கண்டால் முகத்தைத் தூக்கிக் கொண்டு வேகமாகப் போனார்கள்.

அன்று மஞ்சுளாவும் கனகாவும் உத்தியானவனத்தில் மான் குட்டிக்குப் பசும் புல்லை ஊட்டிக் கொண்டிருந் தார்கள். ஏதோ காரணமாக அந்தப் பக்கம் வந்த கீர்த்தி அவர்களைச் சந்தித்தான்.

''மஞ்சு....! நீங்கள்கூட என்னிடம் பேசாதபடி நான் உங்கள் இருவருக்கும் என்ன தீங்கு செய்தேன்?'' என்று கேட்டான்.

கண்கள் பளபளக்கத் திரும்பியவள், ''என் பெயர் மஞ்சு இல்லை, மஞ்சுளா! உங்கள் தம்பிகளைப் பரலோகத்துக்கு அனுப்பிவிட்டுப் பரம சந்தோஷமாக இருக்கிறீர்கள் இல்லையா?'' என்றாள்.

''அதனால்தான் உங்களுக்கு என் மீது கோபமா? இதோ பார் மஞ்சு— இல்லை மஞ்சுளா. இன்பவண்ணன் எங்கும் போய் விடவில்லை. ராஜ குமாரர்கள் தேச சஞ்சாரம் செய்து வருவது வழக்கமில்லையா? பல தேசங் களுக்குப் போய் வந்தால்தானே உலக அனுபவம் ஏற்படும். அதற்காக ஊர் சுற்றப் போயிருக்கிறார்கள். அலுப்பு ஏற் பட்டதும் அண்ணனும் தம்பியும் தாமாக நாடு திரும்புகிறார்கள். இதற்காகப் போய்...'' என்று அவனுக்கே உரிய கிண்டலும் கேலியுமாகக் கலகலவென்று சிரித்தான் கீர்த்தி.


''இளவரசர் இன்பவண்ணன் தேச யாத்திரை போயிருக்கிறாரா? ஊர் சுற்றுவதில் சலிப்பு ஏற்பட்டால் நாடு திரும்புவாராக்கும். அப்படியானால் அவ ருக்கு என் மீதும் சலிப்புத்தானா?'' என்று கேட்ட மஞ்சு, தான் ஓர் இள வரசி என்பதையும் மறந்து 'கோ' என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

பாவம் கீர்த்தி அவன் இதுவரையில் யாரையும் காதலித்ததில்லை. காதலர் களின் மனநிலையைப் பற்றியும் அவ னுக்குத் தெரியாது. மஞ்சுளாவின் கதறல் அவனைக் கலகலக்கச் செய்து விட்டது. ''மஞ்சு, மஞ்சுளா....இது என்னது குழந்தை மாதிரி....?'' என்று அவள் கைகளைப் பற்றினான். அவள் தன் கையை வெடுக்கென்று விடுவித்துக் கொண்டு வேகமாக அரண்மனையை நோக்கி ஓடினாள். கீர்த்திக்கு ரொம்ப அவமானமாகிவிட்டது. பரிதாபமாக அவள் ஓடுவதையே பார்த்துக்கொண்டு நின்றான். அப்போதுதான் தன்னைச் சுடர் விழிகள் இரண்டு சுட்டெரித்துக் கொண்டு நிற்பதைக் கண்டான். கனகாதான் மூக்கைத் தூக்கிக்கொண்டு அப்படி அலட்சியமாக நின்று கொண் டிருந்தாள். மோகனரங்கனிடம் மோகம் கொண்டிருந்தவள் கனகா. கர்வியும்

சிரிக்க..

சாமா







கூட. மஞ்சுளா அழுதுகொண்டு ஓடவே இவள் ஏதுமே பேசாமல் தலையை நிமிர்த்திக் கொண்டு கீர்த்தியிடமிருந்து ஒதுங்கிப் போனாள்.

பல நாட்கள் வரை மன்னர் மந்தஹாஸர் தம் மகன் கீர்த்தியைச் சந்திக்கவே இல்லை. இழந்த பிள்ளைகளை நினைந்து ஏங்கவும், இருக்கும் மகனுக்குச் சரியான புத்தி கற்பிக்கவும் என்ன செய்யலாம் என்று ஆலோசிக்க ஏகாந்தத்தை நாடி எங்கோ போயிருந்தார்.

திரும்பி வந்தபோது ஒரு திட்டத்துடனேயே வந்திருந்தார் மன்னர். பல தலை முறைகளாக அரச குடும்பத்தினர் வாழ்ந்து வரும் அந்த அரண்மனையை—கோட்டையை—விட்டு மன்னர் தமது இருப்பிடத்தை வெகுதூரத்தில் உள்ள வேறொரு நகரத்துக்கு மாற்றிக் கொண்டு கீர்த்திவர்மனிடமிருந்து தாமே ஒதுங்கி போய்விடுவதென்று தீர்மானித்துவிட்டார் மன்னர். அந்தப் பெரிய அரண்மனையில் இளவரசன் கீர்த்திவர்மனை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லோரும் உடனே புதிய அரண்மனைக்குக் குடிபெயர்ந்துவிடுவது என்ற திட்டத்தில் மிகவும் உறுதியாக இருந்தார் மன்னர். அது மட்டுமல்ல. இதைக் கீர்த்திக்குத் தெரியாமல் செயல்படுத்த வேண்டும் என்பதிலும் அவர் குறியாக இருந்தார். ராணியின் அன்புக்குகந்த மகன் கீர்த்தி. அவள் ஒருத்திதான் இந்த ஏற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். ஆனால் இத்தனை ஆண்டுகளாக ராணிக்குப் பயந்து வந்த மந்தஹாசர் இப்போது திடீரென்று வெகுண்டார். ரத்னாவதியே பயந்து போனாள் என்றால் மந்தஹாசரின் கோபம் எப்படி இருந்திருக்கவேண்டும்! அரண்மனையில் உள்ள மற்றவர்கள் இந்த ஏற்பாட்டினால் மகிழ்ச்சியே அடைந்தார்கள்.

அரண்மனைக்குள் நிலவும் அசாதாரணமான மௌனமும், செயல்களும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதைக் கீர்த்தியின் உள்ளுணர்வு உணர்த்தியதானாலும் அவன் அதில் அக்கறை காட்டவில்லை.

ஒரு நாள் காலை.....

இளவரசன் கீர்த்திவர்மன் கண் விழித்து எழுந்து தன் படுக்கையில் அமர்ந்தபடி உடலை முறுக்கிச் சோம்பலை உதறிவிட்டுக் கொண்டு எழுந்திருந்தான். குளிர்ந்த காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. மனத்திலே புதிய உத்ஸாகம் பொங்கியது. அதே சமயம் வயிற்றில் பசியும் பரபரத்தது. இரவு ஆராய்ச்சி நூலொன்றைப் படித்துக் கொண்டிருந்தவன் அப்படியே சாப்பிடப் போகாமல் கண்ணயர்ந்து விட்டான். இப்போதெல்லாம் இளவரசனை அரண்மனையில் யாருமே கவனிப்பதில்லை. ஆகவே அவனை உணவருந்த எவரும் வந்து கூப்பிடவும் இல்லை.

கீர்த்தி தன் அறையிலிருந்து வெளி வந்தான். அரண்மனை வெறிச்சோடிக் கிடந்தது. யாரையுமே காணோம். ஆட்களை மட்டும்தானா? அரண்மனையில் உள்ள பொருள்கள் எதையுமே கூடக் காணோம். எல்லாம் எல்லாரும் எங்கே? ஒவ்வோர் அறையாக ஓடிப் போய்ப் பார்த்தான். வெறுமையாகிக் கிடந்தது. தன் அறைக்கே திரும்பி வந்தவனுக்கு இன்னும் அதிக அதிர்ச்சி காத்திருந்தது. அவனுடைய உடைகள் எதையுமே காணோம். காலணிகள், உடை வாள், தலைப்பாகை மேலங்கி ஏதுமில்லை. அவன் உடுத்தியிருக்கும் ஆடையைத் தவிர வேறு ஏதுமே இல்லை. அரண்மனையில் அவர்கள் எதையும் விட்டுப் போயிருக்கவில்லை. எடுத்துப் போக முடியாதவைகளை அரண்மனைப் பணியாளர்கள் உடைத்துக் கிழித்துச் சின்னாபின்னமாக்கிப் பயன்படாதவாறு செய்துவிட்டுப் போயிருந்தார்கள்.

கீர்த்திக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் விளங்கின. தன்னை அவமானப்படுத்தவும் உதாசீனப்படுத்தி ஒதுக்கவும் மன்னர் செய்த காரியம் இது என்பதை உணர்ந்து கொண்டான். இத்தனைக்கும் அவன் செய்த தவறுதான் என்ன? அதிக புத்திசாலியாக அறிவாளியாக இருந்ததுதான். கீர்த்தி என்ன செய்வான்? அந்த வயோதிகரான முனிவர் வாழ்த்தி அளித்த வரத்தின் கோளாறல்லவா இது? புத்திசாலியாக இருப்பவர்களிடம் அப்படி இல்லாதவர்கள் பொருமையும் விரோதமும் கொள்வது இந்த உலகில் வழி வழியாக நடந்து வரும் காரியம்தான். இதோ கீர்த்தியின் நிலையைப் பாருங்கள். அவன் அறிவாளியாக இருந்ததினால் எத்தகைய தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறான். இளவரசனான அவனுக்கு மாற்றுடை இல்லை. பசித்த வயிற்றுக்குச் சூடான சுவையான உணவில்லை. வெளியே நடந்து போகவேண்டுமானால் காலில் அணிந்து கொள்ளப் பாதரட்சை இல்லை. கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கக்கூட அத்தனை பெரிய அரண்மனையில் ஒரு பணியாள் இல்லை. கையிலே பைசாவும் இல்லை. கீர்த்திக்குப் பசியோ வயிற்றைக் குடைந்தது. என்ன செய்வான்?

(தொடரும்)

வாடா மலர்

எல்லா நல்ல பழக்கங்களும் அடிக்கடி காரண காரியங்களோடு விளக்கப்படாததால் மூடநம்பிக்கைகள் என்று தூஷிக்கப்படுகின்றன. — காந்திஜி



'இல்லை' யென்று நம்மால் நிரூபிக்க முடியாததை 'உண்டு' என்று நாம் நம்பத்தான் வேண்டும். — டெனிஸன்

பணம் அல்லது உயிர்

ஒரு நாள் பீட்டர்மன் என்பவர் தன்னந்தனியாகக் காட்டுப் பாதையில் உலாவச் சென்றார். அப்போது திடீரென முகமூடியணிந்த திருடன் ஒருவன் அவர் முகத்துக்கு நேராகக் கைத் துப்பாக்கியை நீட்டியவண்ணம், ''பணம் அல்லது உன் உயிர்'' எனக் கூறி மிரட்டினான்.

திருடனைக் கண்டதும் பீட்டர்மனுக்கு ஓரளவு நடுக்கம் ஏற்பட்டது. அவனை எதிர்த்துப் போராடக் கைவசம் துப்பாக்கியோ, வேறு ஆயுதமோ ஏதுமில்லை. ஆனால் தன்னம்பிக்கையை மட்டும் அவர் இழக்கவில்லை.

திருடனிடம் சுமுகமான முறையில் பேச ஆரம்பித்தார்: ''நண்பனே, எனக்கு உயிரைக் காட்டிலும் பணம் பெரிதல்ல. பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். ஆனால் பணமின்றி நான் வீடு திரும்பினால் என் மனைவி என்னைக் கடிந்து கொள்வாளே என்றுதான் தயங்குகிறேன். இந்தப் பிரச்னை தீர நீதான் ஓர் உதவி செய்ய வேண்டும். அதாவது வழியிலே ஒரு பயங்கரத் திருடனிடம் மாட்டிக் கொண்டு நான் அவஸ்தைப்பட்டதாக என் மனைவி எப்படியும் நம்ப வேண்டும். அதற்கென நீ என் கோட்டின் ஒரு பகுதியைப் பார்த்து உன் கைத் துப்பாக்கியைக் கொண்டு சுடு'' என்றார்.

''என்னையா நீர், உமது மனைவிக்குப் பயந்து சாகிற மனுஷன்போல் தெரிகிறதே!'' என்று சிரித்துக் கொண்டே அந்தத் திருடன், பீட்டர்மன் அணிந்திருந்த கோட்டைக் குறிபார்த்துச் சுட்டான்.

''தாங்க் யூ: இன்னொரு முறை இந்தக் கால் சட்டையின் ஓரத்தைப் பார்த்துச் சுடு'' என்றார் பீட்டர்மன்.

திருடனும் அவ்வாறே அவரது கால் சட்டையை நோக்கிச் சுட்டான்.

''தாங்க் யூ; இந்தத் தொப்பியை நோக்கி ஒரு குண்டு. நடக்கட்டும், உன் கைவரிசை'' என்றார் பீட்டர்மன். திருடன் சலிக்காமல் சிரித்துக் கொண்டே சுட்டான்.

அதோடு துப்பாக்கியில் உள்ள குண்டுகளும் காலியாகிவிட்டன.

பீட்டர்மன் திருடனை நோக்கி, ''நண்பனே, உன் துப்பாக்கியில் இதற்கு மேல் குண்டுகள் இல்லை, என்னிடம் பணமும் இல்லை'' என்றார் சிரித்துக் கொண்டே. இது சமயம் சில வழிப் போக்கர் அவ்வழி வரும் சந்தடி கேட்கவே, அந்த முட்டாள் திருடனும் செய்வது என்னவெனத் தெரியாது பேந்தப் பேந்த விழித்தான்.

'திருடனுக்குத் தேள் கொட்டியது போல' என்று நாம் சொல்வதுண்டல்லவா? அதன் விளக்கம்தான் இச்சிறு கதை போலும்!

ஜெர்மானியக் குட்டிக் கதையைத் தமிழில் தருபவர்

ரா. ப. ஜவாஹர்லால்





தெரியுமா?

1181. காகிதப் பென்சில்களில் *HB, B-H, 2B* இப்படிக் குறித்திருப்பார்கள். இது எதைக் குறிக்கிறது? கடினமான பென்சில் என்பதை இக்குறிகளில் எக் குறி அறிவிக்கும்?

1182. கீழ்க்கண்ட பிரபலமான ஆங்கில நாடகங்களில் ஷேக்ஸ்பியர் எழுதாதது ஒன்று இருக்கிறது. அது எது ? *a.* ஹாம்லெட், *b.* மாக்பெத், *c.* ஆண்டனியும் கிளியோபாத்ராவும், *d.* செயிண்ட் ஜான்.

1183. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறையை முதன் முதலில் கண்டவர் யார் ?

1184. கங்கை, யமுனை, சிந்து, காவேரி, பிரம்மபுத்திரா இந்த நதிகள் எந்தெந்த மாநிலங்களை வளப்படுத்துகின்றன என்று தெரியுமா?

1185. வல்லபி, யாக், லாமா, பைசன் — இந்த மிருகங்கள் எந்த எந்த நாடுகளில் வாழக்கூடியவை ?

1186. டிரைஸ் *(Tries)*, ஸெட்ஸ் *(Sets)*, சுகாஸ் *(Chukkas)*, செக்மேட் *(Checkmate)* — இந்தப் பதங்கள் எந்தெந்த விளையாட்டுக்களில் பயன்படுகின்றனவென்று தெரியுமா?

1187. கீழ்க்கண்ட தேசங்களில் எதில் காப்பி அபரிமிதமாகப் பயிரிடப் படுகிறது? துருக்கி, நைஜீரியா, பிரேஸில், அரேபியா.

1188. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொடிக்கு யூனியன் ஜாக் என்று பெயர் இல்லையா? அதே மாதிரி அமெரிக்காவின் கொடியை, ரோமன் கத்தோலிக்கர்களின் மதத் தலைவரை, அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் அரண்மனையை கிறிஸ்துவர்களின் வேதப் புத்தகமான பைபிளின் இரண்டாம் பாகத்தை — என்ன பெயரிட்டு அழைக்கிறோம் ?

1189. தமிழ்நாட்டில் மூவேந்தர்கள் என்றால் அது யாரைக் குறிக்கும்? அவர்களுடைய கொடியின் சின்னங்கள் எவை?

1190. ரூபி, எமரால்டு, ஜெட், ஸஃபையர் இந்த ரத்தினங்களின் நிறம் என்ன?

1191. லைபீரியா எங்குள்ளது? சீனாவிலா, தென் அமெரிக்காவிலா, ஆப்பிரிக்காவிலா, ஆஸ்திரேலியாவிலா?

1192. தமிழகம் பண்டைக் காலத்தில் கடல் கடந்தும் வாணிபம் செய்தது என்ற பெருமைக்குரியது. மேல்நாட்டினர் தமிழகத்திலிருந்து வாங்கிச் சென்ற பொருள்கள் எவை? விற்ற பொருள்கள் எவை என்று தெரியுமா?

1193. ஸ்விட்ஸர்லாந்தின் தலைநகர் — ஸுரிச் — பெர்ன் — ஜெனீவா — மாண்ட் ரீக்ஸ் — இவற்றில் எது?

1194. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய ஆண்டு தெரியுமா ?

1195. கன்னியாகுமரியைக் குமரி முனை என்பீர்கள். அதே மாதிரி *a.* ஆப்பிரிக்காவின் தெற்கு முனையை *b.* தென் அமெரிக்காவின் தென் கோடி முனையை *c.* இங்கிலாந்தின் தென்கோடி முனையை என்ன பெயரிட்டு அழைக்கிறார்கள் தெரியுமா ?

1196. குதிரைகள் வசிக்கும் இடத்துக்கு லாயம் (ஸ்டேபிள்ஸ்) என்று பெயர். அதேமாதிரி *a.* நாய்கள் *b.* துறவு பூண்ட கிறிஸ்துவப் பெண்கள் *(Nuns)* *c.* தேனீக்கள் *d.* போர் வீரர்கள் *e.* பன்றிகள் வாழும் இடங்களுக்கு என்ன பெயர்?

1197. கீழ்க்கண்ட ஊர்களில் தமிழ்நாட்டில் இல்லாதது எது? மகாபலிபுரம், கங்கைகொண்ட சோழபுரம், சோமநாதபுரம், ராமநாதபுரம்.



தெரியுமே!

1181. மிகக் கறுப்பாக (2B) கறுப்பும் கடினமும் கொண்ட (HB) கடினமான (H) என்பதைக் குறிக்கவே இக் குறியீடுகள். பென்சிலின் தரத்தை அறியலாம் இதைக் கொண்டு. 1182. d. செயிண்ட் ஜான் என்ற நாடகம். 1183. மைக்கேல் ஃபாரடே. 1184. கங்கை: உத்திரப் பிரதேசம், பீஹார். மே. வங்கம். யமுனை: உத்திரப் பிரதேசம். சிந்து: மே. பாகிஸ்தானில். காவேரி: மைசூர், தமிழ்நாடு. பிரும்மபுத்திரா: அஸ்ஸாம் & கி. பாகிஸ்தான். 1185. வல்லபி - ஆஸ்திரேலியா; யாக். திபெத்; லாமா - பெரு; பைசன் - வட அமெரிக்கா- 1186. டிரைஸ் - ரக்பி ஃபுட்பால்; ஸெட்ஸ் - டென்னிஸ்; சுகாஸ் - போலோ; செக்மேட் - செஸ். 1187. பிரேஸில் நாடு தான் உலகில் காப்பி உற்பத்தியில் முதன்மை யானது. 1188. அமெரிக்கக் கொடியை - நட்சத்திரங்களும் கோடுகளும் என்று. ரோமன் கத்தோலிக்க மதத் தலைவரைப் போப் ஆண்டவர் என்று. வெள்ளை மாளிகை என்று. புதிய ஏற்பாடு (நியூ டெஸ்ட மெண்ட்) என்று. 1189. சேர, சோழ, பாண்டிய மன்னர்களே மூவேந்தர் எனப்பட்டனர். சேரனுக்கு விற்கொடி. சோழனுக்குப் புலிக் கொடி. பாண்டியனுக்கு மீன் கொடி. 1190. ரூபி - சிகப்பு; எமரால்டு - பச்சை; ஜெட் - கறுப்பு; ஸஃபயர்-நீலம். 1191. ஆப்பிரிக்காவில். 1192. தமிழகத்திலிருந்து மிளகு, வைரம், பவளம், துணி, மயில், மயில் தோகை, யானை, யானைத் தந்தம், குரங்கு. வாசனைப் பொருள்கள் இவற்றை ஏற்றுமதி. ஈயம், கண்ணாடி. மது இவற்றைத் தந்து போயினர். 1193. பெர்ன். 1194. 1936-ம் ஆண்டில். 1195. a. நன்னம்பிக்கை முனை. b. கேப் ஹார்ன்ஸ். c. லாண்ட்ஸ் எண்ட் (Lands end). 1196. a. கென்னல்ஸ். b. c. தேன் கூடு (Hives). d. பாரக்ஸ். e. ஸ்டைஸ் (Sties). 1197. சோமநாதபுரம்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

REGISTERED NO. M. 9040

GOKULAM, Children's Fortnightly

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திராஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி; மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிககபபடுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் ததாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய்-400001



